
கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
14-9-1975
60 காசு





AIYARS-M.461 TM



கோகுலம்

மலர் 6 இதழ் 12
செப்டம்பர் 14, 1975
ராட்சஸ, ஆவணி 29

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

புதிய சந்தா விகிதம்
இந்தியா

ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50
ஒரு வருடம்	ரூ 33.00

இதர வெளிநாடுகள்

ஆறு மாதம்	ரூ. 16.50

பல்பு பொம்மைகள்

உபயோகமில்லை என்று தூக்கி எறியும் பொருள்களைக் கொண்டு, பிறர் கவனத்தைக் கவரும் எத்தனையோ பொருள்களைச் செய்யலாம். ஃபியூஸ் ஆன பல்புகள் இருக்குமே உங்கள் வீட்டில்! சாதாரண பல்பின் அமைப்பிலிருந்து மாறுபட்ட உருவமுடைய பல்புகள் கிடைத்தால் ரொம்ப நல்லது. 'நைட் லாம்ப்' பல்பு, அலங்கார விளக்குகளுக்குப் பயன்படும் பல்பு இப்படிப் பலவகை. பற்பசை மூடி அல்லது இப்போதெல்லாம் புட்டிகளுக்கு உள்ளே ஒரு பிளாஸ்டிக் அடைப்பான்கள் போட்டு வருகிறதே இவை நீங்கள் உருவாக்கப் போகும் மனிதனுக்குத் தொப்பிகளாகப் பயன்படும்.

இனி களிமண்ணில் கொஞ்சம் நீர் விட்டுப் பிசைந்து கெட்டியாகப் பந்து போல உருண்டையாகச் செய்து வைத்துக் கொள்ளுங்கள். பல்பின் திருகுப் பகுதியை இந்த உருண்டையின் மீது வைத்து அழுத்திப் பதிய வையுங்கள். இனிமேல்தான் உங்கள் கைத்திறனுக்கு வேலை. வெள்ளை நிற பல்புகளானால் முதல் கோட்டிங் தேவையில்லை. நிற மற்ற பல்புகளானால் ஏதாவது ஒரு கலரில் முதல் பூச்சு கொடுக்க வேண்டும். படம் போடத் தெரிந்தவர்களானால், ரொம்ப அழகான பொம்மைகளை உருவாக்கிவிடலாம். பலவித வர்ணங்களும் பிரஷும் கொண்டு இங்கு காட்டியுள்ளபடி பல்புகளின் மீது வரையுங்கள். உங்கள் கற்பனைப்படியும் மனித உருவங்களை உருவாக்கலாம். நீங்கள் தயாரிக்கும் இந்தப் பல்பு பொம்மைகள் எல்லோரையும் கவர்ந்து இழுக்கும்.

— கே. சாந்தா






நீங்கள் உயரமானவரா?

இயற்கையிலேயே நீங்கள் உயரமானவரானால் அது உங்களுக்குக் கடவுள் அளித்த வரப்பிரசாதமாக எண்ண வேண்டும். உயரமான பெண்கள்தான் பிறர் கவனத்தைக் கவரும் அழகுடையவர்கள். உயரமானவர்கள் கேலிக்குள்ளாவதும் உண்டு. ரொம்பவும் உயரமாக இருப்பதற்காகக் கவலைப்பட வேண்டாம். உயரத்தைக் குறைத்துக் காட்டச் சில யோசனைகள்:

வேண்டுதல்!

- உடைகளுக்குத் துணி வாங்கும் போது படுக்கைக் கோட்டு (ஹரிஸாண்டல்) வாக்கில் — அதாவது துணியின் நீளத்திலே செல்லும் கோடுடையதாக வாங்குங்கள். தைக்கும்போது கோடுகள் உங்கள் உடலைச் சுற்றி வரும்படி இருக்கட்டும். இது உங்கள் உயரத்தைக் கணிசமாகக் குறைத்துக் காட்டும்.
- ஒரே கவுனை அணியாமல் இரு உடைகளாகக் கீழே ஸ்கர்ட்டும், மேலே ஜாக்கெட்டுமாக அணிவது நல்லது. இரண்டும் இரு வேறு வண்ணங்களில் இருக்கட்டும்.
- கவுனானால் இடுப்பில் அகலமான பெல்ட் வரும்படி அமைக்கச் சொல்லுங்கள்.
- உடைகளுக்குத் துணி வாங்கும்போது ஆழ்ந்த வண்ணங்களாகவும், பெரிய பெரிய பூக்கள் உள்ளதாகவும் பார்த்து வாங்குங்கள்.

அது சரி, வேண்டாதவை என்ன தெரியுமா? 27ம் பக்கம் பார்க்க!



12. மூடர் சேர்க்கை முடிவைத் தரும்

நவகோடி நாராயணன் செட்டியார் என்பவர் பெருக்கு ஏற்பப் பெருந்தன முடையவராக இருந்தார். தனம் மட்டும் இருந்தது. மனம் இல்லை. நூற்றுக்கு ஆறு ரூபாய் வட்டி நியாயமாக வாங்குவார். மாதம் பத்து வீதம் பணம் கட்ட வேண்டும். பத்து மாதங்களில் கடன் தீர்க்க வேண்டும். முதலிலேயே பத்து மாதங்களுக்கும் வட்டியை எடுத்துக் கொள்ளுவார். பத்து மாதங்களுக்கு வட்டி அறுபது ரூபாய். எழுத்துக் கூலி முக்கால் ரூபாய். மகமைப் பணம் ஒண்ணேகால் ரூபாய். ஆக அறுபத்தி இரண்டு ரூபாய் பிடித்துக் கொண்டு முப்பத்தெட்டு ரூபாய் தருவார். பாண்டு நூறு ரூபாய்க்கு எழுதி வாங்கிக்கொள்ளுவார். இப்படி மக்களைக் கசக்கிப் பிழிந்து பொருள் சேர்த்து வந்தார். வட்டிக்கு மேல் வட்டி வாங்கிப் பெட்டி மேல் பெட்டி அடுக்கி வந்தார். குட்டி குழந்தைகள் ஒன்றும் கிடையாது. எட்டு முழம் வேட்டி ஒரு சுற்றுக்கு வரும். அவ்வளவு பருத்த தேகம். கருத்த மேனி. பருத்த தொந்தி. ஈவு இரக்கமில்லாத சிந்தை.

வெளியூர்களில் சென்று பணம் கொடுத்து வசூல் செய்வார். ஒரு நாள் அயல் ஊர் சென்று கொடுத்த பணங்களை வசூலித்தார். ஐம்பது ஆயிரம் சேர்ந்தது. அந்தக் காலத்தில் கரன்ஸி நோட்டுக் கிடையாது. எல்லாம் தங்கக் காசுகள். வலைப் பையில் இட்டு இடுப்பில் இறுக்கிக் கட்டிக் கொண்டார். எப்பொழுதும் அவருக்குத் துணையாகக் குண்டாந்தடி போல் ஒருவன் இருப்பான். அன்று அவனுக்குத் திடீரென்று ஜுரம் வந்து படுத்து விட்டான். செட்டியாருக்கு அந்த ஊரில் தங்க அச்சம். ஊருக்குப் போய்விடலாம் என்ற அசட்டுத் தைரியத்தில் புறப்பட்டார்.

இன்னும் பத்து மைல்கள் போக வேண்டும். துணைக்கு ஓர் ஆள் இருந்தால் நல்லது என்று எண்ணினார். வழியில் செக்கு உலக்கை போல் ஓர் இளைஞன் நின்றிருந்தான்.

''ஆரப்பா?''

''நான் வீரப்பா.''

''நான் சிங்கபுரம் போகிறேன். துணைக்கு வருகின்றாயா?''

''எம்புரத்துக்குக்கூட வருவேன்.''

செட்டியார் அவனை அழைத்துக் கொண்டு இனிப் பயமில்லை என்று எண்ணித் தைரியத்துடன் வழி நடந்தார். இரண்டு மைல் போனார். வழியில் ஆலமரத்தடியில் ஒரு கிழவி இட்டிலிக் கடை வைத்திருந்தாள். இதனைப் பார்த்தவுடன் வீரப்பன் ''செட்டியாரே! பசி காதை அடைக்கிறது'' என்றான்.

தாராள மனமுள்ள தருமப் பிரபுவாகிய செட்டியார் எட்டு அணா தந்தார். பெரிய அளவுள்ள இட்டிலி. அணாவுக்கு நான்கு இட்டிலி. வீரப்பன் இரண்டணா தந்து எட்டு இட்டிலியை விழுங்கி ஒரு செம்புத் தண்ணீரைக் குடித்தான். வயிறும் 'கம்' என்று நிறைந்து ஏப்பம் விட்டான்.

அறநெறி



மிகுதி ஆறணாவைச் செட்டியாரிடம் நீட்டினான். ''நீயே வைத்துக் கொள்'' என்றார். அந்த மூட சிகாமணி மடியில் ஆறணாவை வைத்துக் கொண்டான். அவன் தலை கிறுகிறுத்தது.

முந்திரி மேல் காணி
மிகுமே கீழ்மக்கள்
இந்திரனா யெண்ணி
விடும்

என்ற நாலடியார் வாக்கின்படி அரையணாவைப் பார்த்தறியாத அவன் ஆறணாவை மடியில் வைத்தவுடன் தன்னைக் குபேரனாகவே நினைத்துக் கொண்

டான். வெகு குஷி. ''செட்டியாரே! வாரும்'' என்று கர்ஜித்தான்.

இரண்டு மைல்கள் நடந்தார்கள். இருட்டிவிட்டது. குறுங்காடு!

வீரப்பன், ''செட்டியாரே! இது பயங்கரமான காடு. இங்கே தினம் கொலை நடக்கிறது. நேற்று இருவரைக் கொன்று விட்டார்கள். முந்தாநாள் மூன்று பேரைச் சீவிவிட்டார்கள். உன்னைக் கொன்றுவிட்டால் அழுவதற்கு உன் மனைவி இருக்கிறாள். எனக்கு அம்மா, அப்பா, மனைவி ஒருத்தரும் கிடையாது. செத்தால் அழுவதற்கு யார் இருக்கிறார்கள்? உன் ஆறணாவை வாங்கிக்கொள். இட்டிலியைக் கக்கிவிடுவேன். என்னைக் கொண்டு போய் என் வீட்டில் விடு. இல்லையேல் உன்னை விட மாட்டேன்'' என்றான்.

செட்டியார் நடுங்கிப் போய் விட்டார். ''அம்மிக் கல்லை இடுப்பில் கட்டிக் கொண்டு நீந்தப் பழகியது போல் நாம் இந்த முழு மூடனைத் துணைக்கு அழைத்து வந்தோமே?'' என்று எண்ணி வருந்தினார்.

வீரப்பன், ''ஐயா! அங்கே யாரோ வருகின்றாற்போல் இருக்கின்றது'' என்றான். செட்டியார் பயந்து, வீரப்பனுடன் ஓர் ஆவாரஞ் செடிக்குள் நுழைந்து பதுங்கிக் கொண்டார்.

நேரம் ஆக ஆக வீரப்பன் அங்கேயே படுத்து உறங்கி விட்டான். உருண்டு உருண்டு ஒற்றையடிப் பாதையை அடைந்தான்.

இரவு மணி பன்னிரண்டு.... கரிய உடையுடன் ஈட்டி கத்தி ஏந்திய இருடர்கள் முப்பத்திரண்டு பேர்கள் அவ் வழியே நடந்து சென்றார்கள். செடி மறைவில் உள்ள செட்டியாருக்கு எப்படி இருக்கும்? உடலும் குடலும் நடுங்கின.

இருட்டில் படுத்து உறங்கும் வீரப்பனை மரத் துண்டு என்று கருதிக் கள்வர்கள் தாண்டிச்சென்றார்கள்.

கடைசியில் வந்த ஓர் இளைஞன் மரத் துண்டு வழியில் உளதே என்று காலால் உதைத்து உருட்டினான். முதலில் போகும் கள்ளர் தலைவன், ''அடே, சோமு! அது பனந் துண்டு. காலால் உதைக்காதே. பனஞ் சிறாய்காலில் தைக்கும்'' என்றான்.

அடித்த பந்துபோல் வீரப்பன் எழுந்தான். அவனுக்கு ரோஷமும் கோபமும் பொங்கி வந்தன.

கள்ளர் தலைவனைப் பார்த்து, ''ஐயா! என்னைப் பனந் துண்டு என்கின்றீரே! பனந் துண்டின் மடியில் ஆறணா இருக்குமா? உங்கள் பாட்டன் வீட்டுப் பனந் துண்டின் மடியில் ஆறணா இருக்குமா?'' என்று உரத்த குரலில் கூறினான். கள்ளர் தலைவன் அவன் கன்னத்தில் ஓர் அடி கொடுத்தான்.

''என்னை அடி; கைகால்களை ஒடி; உதை; மண்ணில் புதை. என்ன வேணுமானாலும் செய். பனந்துண்டு என்று மட்டும் சொல்லாதே. பனந் துண்டின் மடியில் ஆறணா இருக்காது.''

கள்ளர் தலைவன் சிரித்தான். இவன் ஆறணா, ஆறணா என்று மாறி மாறிக் கூறுகின்றானே என்று எண்ணி மடியில் இருக்கின்ற ஆறணாவைப் பிடுங்கி, ஓரணா பணமா? ஈரணா பணமா? என்று இருட்டில் தடவிப் பார்த்தான்.

வீரப்பன், ''என்ன ஐயா! பணத்தைத் தடவிப் பார்க்கின்றீர்?... செல்லுமா செல்லாதா என்று பார்க்கின்றீரா? செல்லும் செல்லாதத்தற்குச் செடி மறைவில் இருக்கும் செட்டியாரைக் கேள். அவர்தான் தந்தார்'' என்றான்.

இதற்குப் பின் செட்டியாரின் கதி என்ன ஆயிருக்கும் என்று நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

திருமுருக கிருபானந்த வாரியார்





யார் திருடன்?

ஒரு கிராமத்தில் அடிக்கடி திருட்டு நடந்து கொண்டிருந்தது. அந்நிய மனிதன் யாராவது அந்தக் கிராமத்துக்கு வந்தால் அன்றிரவு அந்தக் கிராமத்தில் யார் வீட்டிலேயாவது திருட்டுப் போய் விடும். இதனால் கிராமத்து மக்கள் எந்த அந்நியனையும் தங்களது வீட்டில் தங்குவதற்கு அனுமதிக்க மறுத்து வந்தனர்.

இப்படிப்பட்ட சமயத்தில் அந்தக் கிராமத்துக்குப் புதிதாக ஒருவன் வந்தான். இரவு நேரம். ஆனால் கிராமத்தில் உள்ளவர்கள் எவரும் அவனுக்குத் தங்குவதற்கு இடம் கொடுக்க மறுத்தனர். அவன் எல்லோரிடமும் கெஞ்சிப் பார்த்தான். யாரும் ஒப்புக் கொள்ளவில்லை. கடைசியில் எந்தவிதமாகவோ வழிப் போக்கனுக்குத் தங்குவதற்கு ஒரு வீட்டில் இடம் கிடைத்துவிட்டது.

அன்றிரவு வழிப்போக்கனுக்கு ஏதோ ஒரு சத்தத்தைக் கேட்டுத் திடீரென்று விழிப்பு வந்தது. அவன் பார்வை ஓரிடத்தில் சென்று நிலைத்தது. அங்கு ஓர் உருவம் சாமான்களைத் திருடிக் கொண்டு மூட்டையோடு சென்று கொண்டிருந்தது. உடனே வழிப் போக்கன் எழுந்து ஓடிச் சென்று அந்த உருவத்தைக் கெட்டியாகக் கட்டிப் பிடித்துக் கொண்டான். அந்த உருவம் திமிறிக் கொண்டு ஓடப் பார்த்தது. முடியாமற் போகவே அந்தத் திருடன், வழிப் போக்கனிடம் கோபத்தோடு சொன்னான், ''டேய், மரியாதையாக என்னை விட்டுவிடு. இல்லாவிட்டால் உன் உயிர் உன்னை விட்டுப் போய்விடும். நான் யார் தெரியுமா?'' என்று மிரட்டினான். அவன் மிரட்டலுக்கு வழிப் போக்கன் பயப்படாமல் பிடித்த பிடியை விடாமல் இருந்தான்.

இருவருக்கும் ஏற்பட்ட சண்டையின் ஒலியைக் கேட்டு அக்கம்பக்கத்திலிருந்த மக்கள் கூடிவிட்டனர். சண்டை போட்ட இருவரையும் பார்த்த மக்கள் திகைத்தனர். காரணம் அவர்களில் ஒருவன் அந்தக் கிராமத்தின் காவல்காரன். மற்றவன் வழிப்போக்கன். 'ஏன் சண்டை போடுகிறீர்கள்?' என்று கேட்டதற்கு இருவரும் ஒருவரையொருவர் திருடன் என்றனர். இந்த வழக்கு கோர்ட்டுக்கு வந்தது. காவல்காரன் வழிப்போக்கன் தான் திருடன் என்றான். வழிப்போக்கன் காவல்காரன்தான் திருடன் என்றான். இதைக் கேட்ட நீதிபதி யோசனையில் ஆழ்ந்தார். பிறகு சொன்னார், ''இங்கிருந்து ஒரு மைல் தூரத்தில் ஓர் ஆறு ஓடுகிறது. அதன் கரையில் துணியால் மூடப்பட்ட பிணம் ஒன்றிருக்கிறது. அதை நீங்கள் இருவரும் இங்கு தூக்கிவர வேண்டும்'' என்றார்.

உடனே வழிப் போக்கனும், காவல்காரனும் ஆற்றங் கரைக்குச் சென்று பிணத்தைத் தூக்கிக் கொண்டு வந்தனர். வரும் வழியில் காவல்காரன் வழிப் போக்கனைப் பார்த்துச் சொன்னான்: ''எவ்வளவு சுலபமாக நான் தப்பித்துவிட்டேன், பார்த்தாயா? என் பேச்சைக் கேட்டிருந்தால் நீயும் சிறைக்குச் செல்லாமல் தப்பி இருக்கலாம் அல்லவா? உனக்கு நன்றாக வேண்டும்!'' என்று மகிழ்ச்சியோடு கொக்கரித்தான். அதற்கு வழிப்போக்கன், ''குற்றமற்ற என்னை நீ குற்றவாளியாக்கி விட்டாய். நீ செய்த குற்றத்துக்குக் கடவுள் கண்டிப்பாய் உனக்குத் தண்டனையளிப்பார்'' என்று மனம் கசந்து கூறினான்.

இப்படிப் பேசிக் கொண்டே இருவரும் பிணத்தை நீதிபதியின் எதிரில் கொண்டு வந்து கிடத்தினர். நீதிபதி பிணத்தின் மேல் மூடியிருந்த துணியை விலக்கினார். உடனே உயிருள்ள மனிதன் ஒருவன் எழுந்து உட்கார்ந்தான். அந்த மனிதன் வழிப் போக்கனும், காவல்காரனும் பேசியதை ஒன்று விடாமல் கூறினான். பிறகு நீதிபதி கூறினார், ''உங்கள் இருவரில் யார் குற்றவாளி என்று கண்டுபிடிக்க நான்தான் இந்த மனிதனைப் பிணம் போல் நடிக்கச் சொன்னேன். அதனால் உங்கள் இருவரில் யார் குற்றவாளி என்று தெரிந்துவிட்டது'' என்று கூறி ஊர்க் காவல்காரனுக்குக் கடுமையான தண்டனை விதித்தார். வழிப்போக்கனைக் குற்றமற்றவன் என்று கூறி விடுதலை செய்துவிட்டார்.

தீர்ப்பைக் கேட்ட மக்களும் 'இதுவல்லவோ உண்மையான தீர்ப்பு!' என்று கூறி மகிழ்ந்தனர். இம்மாதிரி மதி நுட்பமுடன் வழக்குகளைத் தீர்த்து வைத்தவர்தான் 'வந்தே மாதரம்' என்னும் நமது தேசிய கீதத்தை வழங்கிய **பங்கிம் சந்திர சட்டர்ஜி** என்ற வங்கப் பெரியார்.

— சரோஜா ரங்கராஜன்



3

ஒரே இரவுக்குள் ஒப்பற்றதொரு நகரை உருவாக்கிக் கொடுத்த சீதளன் பிங்களன் இருவரும் அதில் ஜீவனில்லாத ஒரு நிலையையும் உருவாக்கி விட்டுப் போய்விட்டார்கள். அழகி பிரியாவுடன் அந்நகரின் அழகும் போய்விட்டது. அந்நகரின் கலகலப்பும் மறைந்து போயிற்று.

சீதளனின் கொடிய சாபமே போல் பனிப் பாளங்கள் நகர் எங்கும் மூடிக் கொண்டன. பசுமையையே காண முடியவில்லை. எத்தனை பாதுகாப்புச் செய்து கொண்டாலும் மக்களின் உடல் கதகதப்பை இழந்து மரத்துப்போயிற்று. உடலில் சூடு இருந்தால்தானே உணர்ச்சிகள் இருக்கும்? செயல்பட முடியும்? பயங்கரமான அந்தப் பனிக் கரத்தின் பிடி வரவர இறுகிக்கொண்டே வரலாயிற்று. மூச்சு விடவேகூட முடியாத நிலை. கைவிரல்களைக்கூட நீட்டி மடக்க முடியாததொரு வேதனை. இதே நிலை நீடித்தாலே போதும். அந்த நகரில் எல்லோரும் எல்லாமும் அப்படி அப்படியே உறைந்து போய்விடுவார்கள், உயிரற்ற பனிப் பாறைகளாக. ஆனால் நிலைமை இதையும் விடக் கொடுமையாக மாறுமானால்?

எத்தனையோ போர்க்களங்களில் எவ்வளவோ இக்கட்டுக்களில் தம் பராக்கிரமத்தினால் வெற்றிகண்ட மன்னர் பராக்கிரமர் இப்போது உயர்ந்த உப்பரிகையிலே உள்ளம் உடைந்த நிலையில் உறைந்துபோய் உட்கார்ந்திருந்தார். அந்த மௌனம், அந்த அமைதி, அந்தச் செயலற்ற தன்மை இவைகளைத் தாங்க முடியவில்லை சத்ருக்னனால்.

''அண்ணா! அழகின் அவதாரமான பிரியா நம்மைவிட்டுப் போனதிலிருந்து எல்லாமே பாழ்பட்டுப் போய்விட்டது. காலதேவன் தன் போர்வையை! வெண்பனியாக இந்நகரின் மீது போர்த்தி விட்டான். இதை உதறிவிட்டு உயிர்பெறப் போகிறோமா அல்லது இப்படியே....''

தம் மௌனத்தைக் கலைத்துக் குரல் கொடுத்தார் பராக்கிரமர். ''தம்பி! இறந்து போவதற்கா இத்தனை பாடுபட்டு இந்த சாம்ராஜ்யத்தைப் பெருக்கினோம்? வாக்குத் தவறியதற்காக நாம் அனுபவிக்கும் இந்தக் கொடிய தண்டனையிலிருந்து விரைவில் விடுபடுவோம். தங்க நதியின் உடைமையான சொக்கத் தங்கத்தை அந்தக் குட்டிச்சாத்தான் குண்டோதரனிடமிருந்து பறித்துச் சீதளனிடம் கொடுத்து நம் உயிருக்குயிரான சகோதரி பிரியாவை மீட்போம். பிரியா இங்கு திரும்பினால் இந்த நகரத்தைப் பிடித்துள்ள பீடை விலகும். களிப்பும் கலகலப்பும் திரும்பும். இப்போதே அந்தக் குண்டோதரனின் இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடிப்போம். கிளம்பு'' என்று கூறியபடி எழுந்தார் பராக்கிரமர். அவர் பேசியபோது அவர் வாயிலிருந்து வெண் புகையாக வெளிவந்தது. அவர் மூச்சுக் காற்றைத்தான் அப்படி வெண் புகையாக்கியது வெளிச் சூழ்நிலை.

மன்னர் பராக்கிரமரும் அவர் தம்பி சத்ருக்னனும் அந்தப் பனி மூடிய புதிய நகரத்துக்கு உயிரூட்டுவதற்காகக் கிளம்பி விட்டார்கள். தங்க நதியின் சொக்கத் தங்கத்தை வைத்திருக்கும் குண்டோதரன் என்ற குள்ளன் எங்கிருக்கிறானோ? எப்படிக் கண்டுபிடிப்பது? எப்படியும் கண்டுபிடித்தேயாகவேண்டும் என்ற முடிவோடு

முனைந்து செயல்பட்டார்கள் சகோதரர்கள் இருவரும். தலைநகரை விட்டு வெகுதூரம் வந்து விட்டார்கள். பராக்கிரமருக்கு அந்தப் பிராந்தியமெல்லாம் அத்துப்படி. அங்குள்ள காடு, மலை, கணவாய்கள், நதியோரங்கள் எல்லாமே அவர் காலடிபட்ட இடங்கள்தான். ஆனால் குள்ளர்களின் இருப்பிடம் இவ்வளவு வெளிப்படையாக எல்லோரும் காணும்படியாக இருக்காது என்பதையும் அவர் அறிவார். பெரும் மலை இடுக்குகளுக்குள்ளேயோ, பூமிக்குக் கீழேயுள்ள பாதாளக் குகைகளிலோ, மனிதர்கள் எளிதில் செல்ல முடியாத கானகங்களின் இருண்ட பகுதிகளிலோதான் அவர்களின் இருப்பிடம் இருக்கும். அதுவும் இப்படிப்பட்ட இடங்களில் குண்டோதரன் எந்தக் கும்பலில் எங்கு இருக்கிறானோ? பராக்கிரமரின் திறமைக்கு இது ஒரு சோதனைதான். ஆனால் அவர் நம்பிக்கை இழக்கவில்லை. தம்பி சத்ருக்னனோடு நெடுந்தூரம் பிரயாணப்பட்டார். குள்ளர்களான குட்டிச் சாத்தான்கள் வாழக்கூடிய இடங்களுக்கெல்லாம் சென்றார்கள். எங்குமே அவர்கள் பார்வையில் ஒரு குள்ளன் கூடப் படவில்லை.

நெடுநாள் பயணத்துக்குப் பிறகு ஒருநாள் பராக்கிரமரும் சத்ருக்னரும் இருபுறமும் வானை முட்டி நின்ற மலைகளுக்கிடையே யுள்ளதொரு கணவாய்ப் பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள். இதுவரை அந்தப் பிரதேசத்துக்கு அவர்கள் வந்ததே இல்லை. எதையும் வெற்றிகொள்வேன் என்று இறுமாந்து நிற்கும் மனிதனைத் தலைகுனிய வைக்கும் கம்பீரத்துடன் உயர்ந்து நின்றன அந்த மலைகள் —ஆரம்பம் எங்கே முடிவு எங்கே என்று காண முடியாத நிலையில். அந்த இரு மலைகளுக்கிடையிலே சிறு புள்ளிகளாக நின்றார்கள் அவ்விருவரும். வெறும் பாறைகளே மட்டுமல்ல, மலைகள் மரகதப் போர்வை போர்த்திக் கொண்டிருப்பதே போல் காடுகள் மண்டிக் கிடந்தன. வண்ண வண்ண மலர்கள் ஆங்காங்கே பூத்துக் குலுங்குவது அந்தப் பச்சைப் போர்வையில் பலவித பூவேலைகள் செய்திருப்பதைப் போன்ற தோற்றத்தைக் கொடுத்தது. ஆங்காங்கே வெள்ளி உருகி வழிவது போல் நீர் வீழ்ச்சிகள், இடையிடையே மிதந்து செல்லும் வெண்புகை போல் மேகங்கள் மலைப் பகுதிகளை மறைத்துக் கொண்டு நின்றன.

இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்ட பராக்கிரமரும் சத்ருக்னனும் தங்களை மறந்தனர். தாங்கள் மேற்கொண்ட பணியை மறந்தனர். இயற்கையின் எழில் மிக்க தோற்றத்திலே இதயத்தைப் பறிகொடுத்து நின்றார்கள். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. இரு மலைகளுக்கிடையே குறுகலான பகுதியில் நெளிந்து சென்றது அந்தப் பாதை. கீழே கீழே போய்க் கொண்டிருந்த அது எங்கு போய் முடிகிறது என்பதே தெரியாமல் மரங்களும் புதர்களும் மறைத்துக் கொண்டிருந்தன. அப்படிப்பட்ட பாதாளத்திலே வெகு தூரத்தில் 'குபீர்' என்று தீ கொழுந்து விட்டு எரிந்தது. கருமையும் பசுமையும் சூழ்ந்து இருள் மயக்கத்திலே முடங்கிக் கொண்டிருந்த அந்தப் பிராந்தியமே திகுதிகுவென்று தீப்பற்றி எரிவது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்திவிட்டு மறைந்தது அந்தச் செந்தீ ஜ்வாலை.

பராக்கிரமருக்குப் பொறி தட்டினாற் போலிருந்தது. ''சத்ருக்னா! இத்தனை







நாட்கள் நாம் எங்கெங்கோ சுற்றியலைந்து விட்டுக் கடைசியில் சரியான இடத்துக்கே வந்து விட்டோம். சற்று முன்பு தூரத்திலே கொழுந்து விட்டு எரிந்து இப் பிரதேசத்தையே செம்மையாக்கியதே, அதுதான் குள்ளர்களின் உலைக் களத்திலிருந்து எழும் நெருப்பு. பூமிக்கு அடியிலே செல்வங்களைக் குவித்து வைத்துப் பாதுகாக்கும் குள்ளர்கள் தங்கத்தையும் வெள்ளியையும் உருக்கி வார்ப்பார்கள். அந்த உலைக் களத்திலிருந்து எழும் தீயைத் தான் நாம் சற்று முன்பு கண்டோம். ஆகவே இங்குதான் மிக அருகே ஏதோ ஓர் இடத்தில் குள்ளர்களின் மறைவிடம் இருக்க வேண்டும். அதற்குச் செல்லும் பாதையும் இந்த மலைகளிலேயுள்ள எங்கோ ஒரு பிளவில், குகை வழியாகப் பாதாளத்துக்குச் செல்லும் பாதையும் இருக்கிறது. ஜ்வாலை தோன்றிய இடத்துக்குப் போனோமானால் அதைக் கண்டுபிடித்து விடலாம்'' என்றார் பராக்கிரமர்.

இருவரும் இருள் சூழ்ந்த அந்த மலைப் பகுதியில் தீப்பந்து தோன்றிய இடத்தைக் குறி வைத்து முன்னேறினார்கள்.

''குள்ளர்களின் மறைவிடத்தைக் கண்டு விட்டோமானால் பிறகு குண்டோதரனைக் கண்டுபிடிப்பது சுலபம்தான்'' என்றான் சத்ருக்னன். பூமியின் மீதுள்ள அதிசயங்களையெல்லாம் கண்டு வியந்திருக்கிறார்கள். ஆழ்கடலின் அடியிலே அதற்கு இணையான அற்புதங்களெல்லாம் இருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தார்கள். ஆனால் இப்போதோ மலைகளுக்குள்ளே புகுந்து போனபோது அவர்கள் அடைந்த பிரமிப்பும் திகைப்பும், அப்பப்பா! இது என்ன மாயா உலகம்? எத்தனை விதமான வண்ண ஸ்படிகங்களைக் கொண்டு எப்படியெல்லாம் தோரணங்களையும், விதானங்களையும் மேடைகளையும் உருவாக்கியிருக்கிறது இயற்கை! இருண்ட மலைக் குகைக்குள் எங்கிருந்து எப்படி ஒளி வருகிறது? அந்த ஒளி பட்டு இந்த ஸ்படிகங்களெல்லாம் எப்படி ஜ்வலிக்கின்றன! வைரம், வைடூரியம், கோமேதகம் போன்ற நவரத்தினங்கள் விளைவது இப்படித்தானோ? பிரமிப்பினால் திக்குமுக்காடிப் போனார்கள் அவ்விருவரும். மலைகளுக்குள்ளே இவ்வளவு அற்புதமான உலகம் ஒன்று இருக்கும் என்பதைப் பராக்கிரமர் கற்பனைகூடச் செய்ததில்லை.

அந்த அற்புத உலகத்திலே விநோதமான ஓசைகளெல்லாம் கேட்டன. படிகங்களினாலான விதானத்திலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது, பல்வேறு நிலைகளில். அவை எழுப்பும் விதவிதமான ஒலிகள் காதுக்கு இனிமையாக இருந்தன. அதையெல்லாம் ரசித்து மகிழ்ந்தபடி மேலே மேலே பராக்கிரமரும் சத்ருக்னனும் போய்க் கொண்டிருந்தார்கள். பாதை முடிவற்றதாக வளர்ந்து கொண்டே போயிற்று. அதே மாதிரி காட்சிகளும் ஓசைகளும் விரிந்து கொண்டே போயின. ஓரிடத்தில்...

'கிளிங்... களாங்... கிளிங்...' என்று மாறுபட்ட ஓசை கேட்டு இருவரும் சட்டென்று நின்றார்கள்; உற்றுக் கேட்டார்கள்; ஊகித்துப் பார்த்தார்கள். பல்வேறு வளைவுகளையும் பாதைகளையும் திருப்பங்களையும் கொண்ட அந்த மலைக் குகையினுள்ளே ஓரிடத்தில் தகதகவென்று தீ ஜ்வாலை விட்டு எரிந்து கொண்டிருந்தது. நீர்க்கசிவும், அதனால் தோன்றும் ஸ்படிகங்களும் குளிர்ச்சியான மலைப் பகுதிக்குள் கொழுந்து



விட்டு எரிந்து கொண்டிருந்த நெருப்பைக் கண்ட அவர்களுக்கு வியப்பான வியப்பு. அந்த வியப்பினூடே மகிழ்ச்சியும் கலந்தது.

அவர்கள் கண்டது உலைக்கூடத்து நெருப்பு. அந்த உலைக்கூடங்களை இயக்கிக்கொண்டிருந்தவர்களோ குள்ளர்கள். ஏராளமான குள்ளர்கள் வரிசை வரிசையாக உருக்கிய தங்கத்தையும் வெள்ளியையும் அச்சுக்களில் வார்த்துக் கொண்டிருந்தார்கள். வேறு சிலர் அவைகளிலிருந்து உருவாக்கிய நாணயங்களை எண்ணிக் குவித்துக் கொண்டிருந்தார்கள். வேறு சில குள்ளர்கள் உலைக் களங்கள் தொடர்ந்து கனன்று கொண்டிருக்கச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். மொத்தத்தில் மலைக்குள்ளே இயற்கையாகவே அமைந்திருந்த அந்த விஸ்தாரமான பிரதேசம் ஒரு பெரிய தொழிற்சாலையாகக் காட்சியளித்தது. வியப்புடன் விரிந்த விழிகளும் திறந்த வாயுமாக வெகு நேரம் பராக்கிரமரும் சத்ருக்னனும் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள், ஒரு ஸ்படிகத் தூணுக்குப் பின்னாலிருந்தபடி.

''இந்தக் குள்ளர்களில் நாம் தேடிக் கொண்டிருக்கும் குண்டோதரனும் ஒருவனாக இருக்கலாமல்லவா?'' என்று கேட்டான் சத்ருக்னன். இப்படி அவன் கேட்ட அதே விநாடி அந்தக் குள்ளர்களிடையே தோன்றினான் குண்டோதரன். அவன் தலையில் ஒரு தங்கக் கிரீடம் இருந்தது. அவனது கைவிரலில் ஒரு பெரிய தங்க மோதிரம் 'பளீர்' என்று ஜ்வலித்துக் கொண்டிருந்தது. அவ்விரண்டும் தங்க நதியின் மந்திரத் தங்கத்தினால் செய்யப்பட்டவைதான். குண்டோதரன் அங்கிருந்த குட்டிப் பாறையின் மீது ஏறி நின்று கொண்டான். குள்ளர்களை நோக்கி ஆணையிடுவது போலக் கூறினான்:

''இனி நான் உங்கள் அரசன். உலகத்துச் சுரங்கங்களிலிருந்து நீங்கள் வெட்டி எடுக்கும் செல்வங்களும், பூமிக்கடியில் பதுக்கிப் பாதுகாக்கும் பொருள்களும் இந்த விநாடியிலிருந்து எனக்கே சொந்தம். என் ஆணைக்குக் கீழ்ப்படியாதவர்களைக் கடுமையாகத் தண்டிப்பேன். அதற்கான தகுதியும் திறமையும் பெற்றிருக்கிறேன் நான். என் தகுதியிலும் திறமையிலும் உங்களில் யாருக்கேனும் சந்தேகம் இருக்குமானால் இதோ என் மந்திர சக்தியைக் காண்பிக்கிறேன், பாருங்கள்'' என்று கூறிக் கொண்டிருக்கும்போதே குண்டோதரனை அவன் இருந்த இடத்தில் காணவில்லை. அதற்குப் பதில் அங்கு பல வண்ணப் புகை குபுகுபு வென்று பொங்கி மலைக் குகையின் முகட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. அதைவிட அதிசயம் அவன் அணிந்திருந்த தங்கக்கிரீடம் அந்தரத்தில் நின்றபடி பளபளத்துக் கொண்டிருந்தது. குண்டோதரனின் உருவம் மாயமாக மறைந்தாலும் அவன் குரல் மட்டும் கணீரென்று கேட்டுக் கொண்டிருந்தது.

''என் திறமையிலும் தகுதியிலும் இப்போது நீங்கள் ஐயப்பட முடியாதல்லவா? ஆகவே நானே உங்கள் அரசன். என் ஆணைப்படி நடக்க வேண்டியது உங்கள் கடமை.''

உருவம் இல்லாமல் குரல் மட்டும் கொக்கரிப்பதைக் கண்ட குள்ளர்கள் பீதியடைந்து நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள். பராக்கிரமரும் சத்ருக்னனும் அந்த அதிசயமான காட்சியைப் பார்த்தபடி ஸ்படிகத் தூணின் மறைவிலே சிலையாக நின்று கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

புண்ணியம் செய்தவன்

ஜெயா நாதன்

மழை கொட்டிய ஓர் இரவு நேரத்தில் ஊர் எல்லையில் இருந்த ஒரு பாழும் மண்டபத்தில் பத்து வழிப்போக்கர்கள் தற்செயலாகக் கூடும்படி நேர்ந்தது. இடி, மின்னல், புயல் காற்றுடன் மழை உக்கிரமாகக் கொட்டிக் கொண்டிருந்தது.

அந்தப் பத்துப் பேர்களில் ஒரு ஜோதிட நிபுணர் இருந்தார். அவர் கூறினார்:

''இந்தப் பத்துப் பேர்களில் யாரோ சிலர் பாவிகள். அவர்கள் தலையில் இன்று இரவு இடி விழுந்து சாகப்போகிறார்கள்!''

எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது.

''பாவிகள் தலையில் இடி விழுவதானால், அருகில் இருக்கும் மற்றவர்களும் மாண்டு அழிய வேண்டியிருக்குமே!'' என்று அவர்கள் கவலை கொண்டார்கள்.

மின்னல் 'பளீர் பளீர்' என்று வெட்டியது. இடியோசை காதைக் கிழித்தது.

''ஜோசியர் ஐயா! யார் அந்தப் பாவி என்று உங்கள் ஜோசியத்தில் பார்த்துச் சொல்ல முடியாதா?'' என்று அவரைக் கவலையோடு கேட்டார்கள்.

ஜோதிடர் கூறினார்: ''யார் அந்த ஆசாமி என்று என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஒருவரா, இருவரா என்றும் தெரியவில்லை. அந்தச் சிலரை மட்டும் வெளியேற்றி விட்டால், மற்றவர்களுக்கு ஆபத்து இல்லை. யார் அந்தப் பாவிகள் என்று தெரியாமல் எல்லோரும் ஒன்றாக இருக்கும் வரை, பாவிகள் மீது விழப்போகும் இடியானது நம் எல்லோரையும் பலி வாங்கத்தான் போகிறது!''

மழை விடவே யில்லை. வானம் 'மடார் மடார்' என்று முழங்கி எங்கெங்கோ இடிகளைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது.

எல்லோரும் ஜோசியரைக் கெஞ்சினார்கள்.



''ஜோசியர் ஐயா! எப்படியாவது நீங்கள்தான் ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டும். நம்மில் யார் பாவி என்பதைக் கண்டுபிடித்து இங்கிருந்து வெளியேற்ற ஒரு வழி சொல்லுங்களேன்!''

ஜோதிடர் வெகு நேரம் ஆழ்ந்து யோசனை செய்தார். கடைசியில் அவர் முகம் மலர்ந்தது. ''உம்... ஒரு வழி கண்டுபிடித்து விட்டேன்!'' என்றார்.


எல்லோரும் ஓடி வந்து அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். ''சொல்லுங்கள்... சொல்லுங்கள்!'' என்று கெஞ்சினார்கள்.

ஜோதிடர் கூறினார்:

''நம் பத்துப் பேர்களில் ஒவ்வொருவராக இங்கிருந்து கிளம்பி அதோ, கூப்பிடு தொலைவில் இருக்கிற அந்தப் புளிய மரத்தைப் போய்த் தொட்டுவிட்டு வரவேண்டும். இங்கிருந்து செல்பவன் பாவியாக இருக்கும் பட்சத்தில், அந்தப் புளிய மரத்தைத் தொடும்போது அந்த மரத்தின் மீது இடி விழுந்து அவன் இறந்து போவான். மற்றவர்கள் பிழைக்கலாம்!''

''நல்ல யோசனை!'' என்று எல்லோரும் பாராட்டினார்கள்.

முதல் மனிதன் கிளம்பினான்.





கல்லுக்குள் ஈரம்

தீங்கசாலையில் ஒரு சின்ன முத்துமாரியம்மன் கோயில் உள்ளது. அங்கு முப்பது வருட காலமாக ஒரு பூசாரி இருந்து வந்தார். அவர் பக்தர்களிடம் அன்புடனும், பண்புடனும் நடந்து கொள்வார். ஒரு நாள் அவருக்கு உடல் நிலை மிகவும் மோசமாக இருந்தது. அச்சமயத்தில் கூட ஆஸ்பத்திரிக்குப் போகாமல் அம்மனுடன் இருந்தார், திடீரென்று அவர் காலையில் இறந்துவிட்டார். மாலையில் அவரது இறுதி ஊர்வலம் நடைபெற்றது. அப்போது அம்மன் கண்ணிலிருந்து கண்ணீர் வந்தது. நானும் சென்று பார்த்தேன். ரேஷன் கடையில்கூட அவ்வளவு பெரிய 'க்யூ' இருக்காது. அழுகிற அம்மனைப் பார்க்க அவ்வளவு பெரிய 'க்யூ' நின்றிருந்தது. நாத்திகர்கள் எல்லாம் அம்மன் மேல் எவரோ தண்ணீர் ஊற்றியிருக்கின்றனர் என்று நம்பவில்லை. சிலை மேல் தண்ணீர்விட்டிருந்தால் கண்ணில் மட்டும் எப்படிக் கண்ணீர் வரும் ?

தனலட்சுமி

வயது - பதினான்கு

'திக் திக்'கென்று மனசு அடித்துக் கொள்ளக் கொட்டுகிற மழையில் நனைந்து கொண்டே போனான். எல்லோரும் அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மின்னல் ஒளியில் அவன் புளிய மரத்தைத் தொட்டு விட்டுத் திரும்பி வருவதைப் பார்த்தார்கள். ஓர் ஆபத்துமின்றி அவன் வந்து சேர்ந்து. ''அப்பாடா, நான் பாவியில்லை!'' என்று பெருமூச்சு விட்டான்.

பிறகு அடுத்த மனிதன் போனான். புளிய மரத்தைத் தொட்டுவிட்டுத் திரும்பி வந்து சேர்ந்தான். அவனுக்கும் ஓர் ஆபத்தும் நேரவில்லை. இப்படி ஒருவர் பின் ஒருவராக ஒன்பது பேர்கள் போய்ப் புளிய மரத்தைத் தொட்டு விட்டுப் பத்திரமாகத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

பத்தாவது மனிதனுக்கு உடம்பு ஒரேயடியாக நடுங்கத் தொடங்கியது. அழவே தொடங்கி விட்டான் அவன்.

'இவ்வளவு பேர்கள் தலையிலும் இடி விழவில்லை. நான்தான் பாக்கி. நான் வெளியில் தலை காட்டினாலே இடி விழுந்து விடலாம்' என்று நினைத்துப் பயந்து அவன் போக மறுத்தான்.

மற்றவர்கள் எல்லோரும் ஒரே குரலில், ''நீதான் பாவி. நீ எங்களோடு இருந்தால் உன் தலையில் இடி விழும் போது உன்னோடு சேர்ந்து அநியாயமாக நாங்களும் இறந்து போய்விடுவோம். ஆகவே, நீ வெளியே போய்த்தான் ஆகவேண்டும்!'' என்று சொல்லி அவன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார்கள்.

வேறு வழியின்றி, கடவுளைப் பிரார்த்தித்தபடியே தயங்கித் தயங்கி மண்டபத்திலிருந்து அவன் வெளியே கிளம்பினான்.

மழை விடவில்லை. 'பளிச் பளிச்' சென்று மின்னிக் கொண்டிருந்தது.

பாழ் மண்டபத்தையும் மற்ற ஒன்பது பேர்களையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே புளிய மரத்தை நோக்கி நடந்தான் அவன். புளிய மரத்தைத் தொட்டுவிட்டுத் திரும்பிய போது, 'டமார்' என்று பேரொலி. ஒரு கணம் அவன் கிடுகிடுத்துப் போய் விட்டான். உடல் வெடவெடத்து நின்றான். என்ன ஆச்சரியம்... இன்னும் அவன் சாகவில்லையா?

அந்த இடி எங்குதான் விழுந்தது?


சுற்று முற்றும் பார்த்தவனுக்கு அதிர்ச்சியினால் பேசவே நா எழவில்லை. அவன் எங்கிருந்து கிளம்பி வந்தானோ, அந்தப் பாழ் மண்டபத்தின் மீதுதான் இடி விழுந்திருந்தது.

உயர்ந்து கரும் பூதம் போல் நின்றிருந்த பாழ் மண்டபம் இடிந்து தூள் தூளாகி யிருந்தது. அந்த ஒன்பது பேரும் என்ன ஆனார்கள்?

ஓடிப்போய் மண்டபம் இருந்த இடத்தைப் பார்த்தான். சாதாரண இடியா அது?... பயங்கரமான பேரிடி! ஒன்பது பேர்களும் இருந்த இடம் தெரியவில்லை. அவர்கள் பஸ்மமாகியிருக்க வேண்டும்.

புல்லரிப்பில் சிலிர்த்து நின்றான் அவன். பத்துப் பேர்களில் அவனைத் தவிர மற்ற ஒன்பது பேர்களும் பாவிகள். தன் புண்ணிய பலத்தில்தான் அந்த ஒன்பது பேர்களும் இவ்வளவு நேரம் வரை பிழைத்திருந்தார்கள். தான் அங்கிருந்து அகல்வதற்காகத்தான் இவ்வளவு நேரம் வரை இடி அங்கு விழாமல் இருந்தது என்று புரிந்தது.


இறைவனின் கருணையைப் பெரிதும் போற்றியபடி தன் பயணத்தைத் தொடர்ந்தான் அந்தப் புண்ணியசாலி.



ஆசிரியர்: ஜீப்பைக் கண்டு பிடித்தவர் யார்?

மாணவன்: ஔரங்கஜீப்!

— எஸ். சந்திரசேகர்




கணவன்: நீ எழுதின ஜோக்கா இது?

மனைவி: ஆமாம்.

கணவன்: யார்கிட்டேயும் காட்டாதே, சிரிக்கப் போறாங்க!

— எஸ். கிருஷ்ணமூர்த்தி



ஒருத்தி: ஏண்டி பங்கஜம், உன் பெயரை லேட்டஸ்ட் பேரா மாத்தினியாமே!

மற்றவள்: ஆமாம் மெட்ரிக் முறையில் 'பங் மீட்டர்'னு மாத்திக்கிட்டேன்!

— எஸ். கிருஷ்ணமூர்த்தி

சிரிக்கச் சிரிக்க



அண்ணா: யானையின் பாலைச் சாப்பிட்டு ஒரு குழந்தை பத்து பவுண்டு எடை கூடினதாகப் பேப்பரிலே படத்துடன் போட்டிருக்கு!

தங்கை: அப்படியா? அது யார் குழந்தை?

அண்ணா: யானையின் குழந்தை!

— குண்டுமணி



'விடாக்கண்ட் வங்கி' விளம்பரம்


"உங்களுக்குக் கல்யாணமானது முதல் எங்கள் வங்கியில் சேமிக்கத் தொடங்கினால் உங்கள் குழந்தைக்கு மூன்று வயதானதும் எல். கே. ஜி.யில் சேர்ப்பதற்கு டொனேஷன் கொடுக்க வசதியா யிருக்கும்!"

— ஆர். சாயிநாத்

ஆசிரியர்: ஏன் இப்படிச் சத்தம் போடுகிறீர்கள்? ஹெட்மாஸ்டர் காதில் விழுந்தால் என்ன நினைப்பார்?

மாணவர்கள்: ஹெட் மாஸ்டர்தான் அரை மணி முன்னால் வந்து உங்களை எழுப்பிவிடச் சொல்லிப் போனார்.

— நா. மா. வைஜயந்தி



ஒருவர்: என் பிள்ளை மூணாங்கிளாஸில் ஃபெயிலாகி விட்டான். நான் அவனைக் கண்டிக்க முடியவில்லை.

மற்றவர்: ஏன்?

ஒருவர்: நான் ஆபீஸ் பரீட்சையில் ஃபெயில் ஆனது அவனுக்குத் தெரிஞ்சுபோச்சு!

— நா. மா. வைஜயந்தி



மாமா: சாப்பிடுவதற்கு முன்னால் சுவாமியை வேண்டிக் கொண்டு சாப்பிடணும்டா குழந்தை!


பையன்: வேண்டாம மாமா! எங்க அம்மா நன்னாத்தான் சமைக்கிறா!

— குண்டுமணி



நந்து சுந்து மந்து (12)

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்





போக மாட்டே? பல்லைக் காட்டிண்டு பாயவா வரே...? இந்தா இதை வாங்கிக்கோ.
காட்டுப் பூனையை நோக்கி வீசிய மீன் வெளியே நின்றிருந்த குதிரையைத் தாக்கியது.
அட சனியனே! என்ன வந்தது உனக்கு? என்னையே குறி பார்த்துப் பாயறயே? உன் பல்லைப் பார்த்தாலே பயமா இருக்கே... ஊ... ஊ...
மீனால் தாக்கப்பட்ட குதிரைக்கு வந்த கோபத்தில் அது கூடாரத்தை நோக்கி ஓர் உதை விட...
குதிரையோட உதை உனக்குப் போதாது. இந்தா இதையும் வாங்கிக்கோ.
பயலே! எப்படிடா உன்னாலே இத்தனை பெரிய மீனைப் பிடிக்க முடிஞ்சது. எங்களுக்கு ஒரு மீன் கூடக் கிடைக்கலியே!
மீனை மட்டுமா புடிச்சான்? காட்டுப் பூனையையும் என்னமாத் தீர்த்துக் கட்டிட்டான் பாத்தியா?
அப்பாடி! ரொட்டி ரொம்ப ஜோர். வயிறு ...புல்!

மலரும் பூவெனப் பிள்ளை
வளர்ந்திடப் பலமான துணை—
இன்க்ரிமின்* டானிக்

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்...இப் பருவத்தில் அவளுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவள் வளர்ச்சியை! பசித்துப புசிப்பாள்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்றோடு உங்கள் மகளின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.



இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு
*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டார்டு டிரேடு மார்க்


175 ml.
Incremin* syrup
VITAMINS B_1, B_6, B_{12}
LYSINE
WITH IRON
TONIC APPETITE STIMULANT
டிராப்ஸ் : 2 மாதங்கள் முதல்
2 வயது வரையில்
ஸிரப் : 14 வயது வரையில்
Sista's INC-363 C/75 Tam

எமிலி

புகழ்பெற்ற வாட்டர்லூ போருக்குப்பிறகு ஃபிரான்ஸின் சிங்காதனம் பதினெட்டாம் லூயி மன்னனுக்கு மறுபடியும் கிடைத்த தருணம். நெப்போலியனுக்கு விசுவாசமாக இருந்தவர்களையெல்லாம் சதிகாரர்கள் என்று கைது செய்தார்கள். எமிலி டி லாவலட்டி என்ற சீமாட்டி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு நாளும், இரவு கணவன் வீடு திரும்பிய பிறகுதான் அவள் மனத் தவிப்பு நீங்கும். எமிலியின் கணவன் எடினே லாவலட்டி நாடு கடத்தப்பட்ட நெப்போலியனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். இறந்த நெப்போலியன் மனைவி ஜோஸஃபைனுக்கு எமிலி ஒரு வகையில் உறவும்கூட. ஆகவே அவள் ஒவ்வொரு விநாடியும் என்ன நடக்குமோ என்று நடுங்கிக் கொண்டிருந்ததில் வியப்பில்லை.

ஒருநாள் மாலை சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தார்கள் எமிலியும் அவள் கணவனும். அப்போது ஒரு போலீஸ் அதிகாரி திடீரென்று உள்ளே நுழைந்தார். ''ஐயா, நீங்கள் என்னோடு உடனே வரவேணும்'' என்றார்.

இந்த அழைப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டார் எமிலியின் கணவர். சட்டென்று எழுந்தார். ''என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் என்ன என்று கூற முடியுமா?'' என்று கேட்டார்.

அந்தப் போலீஸ் அதிகாரி கூறினார்: ''நெப்போலியன் போனபார்ட் எல்பா தீவிலிருந்து தப்பிச் செல்வதற்குத் திட்டமிட்டுக் கொடுத்தது.''

''நெப்போலியன் தப்புவதற்கு நான் உதவி செய்திருந்தால் அதற்காக நான் பெருமையே கொண்டிருப்பேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக நான் அதற்கு உதவவில்லை'' என்றவர் தம் மனைவியின் பக்கம் திரும்பினார். கண்ணீரால் நனைந்திருந்த அவள் கன்னத்தைத் தம் கைக்குட்டையால் துடைத்தார். ''அன்பே! கலவரம் அடையும்படி ஏதும் இருக்காது. கவலைப்படாதே'' என்று கூறியபடி போலீஸ் அதிகாரியைப் பின்தொடர்ந்து வெளியில் சென்றார்.

கணவன் வெளியேறியதும் எமிலிக்கு எதுவுமே ஓடவில்லை. கலவரம் கவ்வியது நெஞ்சை. 'கவலைப்படாதே!' என்று கூறிவிட்டுப் போனாரே, கணவர். கவலை இன்றி எப்படி இருக்க முடியும்? எமிலி குமைந்து போனாள். ''இவர் இப்படியோர் அபாயம் நேரும் என்று தெரிந்திருந்தும் நாட்டைவிட்டு ஏன் ஓடியிருக்கக் கூடாது? அதற்கான அவகாசம் ஏராளமாக இருந்ததே. அவர் ஏன் தலைமறைவாகிவிடவில்லை?'' தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள் எமிலி. அதற்கான விடை அவளுக்குத் தெரியும். அவர் ஓடி ஒளியாததற்குக் காரணம் அவருக்கு ஒரு சின்னஞ் சிறு மகளும் துன்பங்களைத் தாங்காத ஒரு மனைவியும் இருந்ததுதான். தான் இல்லையானால் அவர் இத்தனை நாளில் இவர்கள் கைக்கு அகப்படாத தூரத்துக்குப் போயிருப்பார்'' என்று எண்ணியதும் நெஞ்சம் வெடிக்க விம்மினாள் எமிலி.

நவம்பரில் எமிலியின் கணவர் மீது விசாரணை நடந்தது. தீர்ப்பு மரண தண்டனை. எமிலியின் இரு தோழிகள் தான் இந்தச் செய்தியை அவளுக்குத் தெரிவித்தார்கள். மன்னரிடம் கருணை மனு கொடுக்குமாறும் வற்புறுத்தினார்கள். ''மன்னரின் பேட்டி கேட்டு எழுது. நேரில் போய்க் கண்ணீர்விட்டுக் கருணை காட்டும்படி வேண்டிக்கொள்'' என்றார்கள்.

எமிலி ஒரு மாதிரியான பெண். கௌரவம் பார்ப்பவள்; படபடப்புக் ஆனால் அதையெல்லாம் ஒதுக்கிவிட்டு மன்னரின் சமூகத்துக்கு அவரது தரிசனம் வேண்டி எழுதினாள். பேட்டி கொடுப்பதாக மன்னரிடமிருந்து கடிதம் வந்ததும் களிப்போடு அரண்மனைக்கு ஓடினாள். உடலும் உள்ளமும் நடுங்க மன்னரின் முன்னால் அவள் நின்றாள். அரசர் அமைதியாகச் சுருக்கமாகத் தம் பேச்சை முடித்துக்கொண்டு எழுந்துவிட்டார்.

''பெண்ணே! என் அனுதாபத்தை உன்னிடம் நேரில் தெரிவிக்கவே உனது விருப்பத்துக்கு இணங்கிப் பேட்டி அளித்தேன்!''

டிசம்பரில் எமிலியின் கணவன் லாவலட்டியின் மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது. தண்டனை நிறைவேற மூன்றே தினங்கள்தான் இருந்தன.

தண்டனை நிறைவேற்றப்படும் வரை கைதியைத் தினமும் காண்பதற்கு எமிலிக்கு அனுமதி அளித்திருந்தார்கள். முதல் நாள் எமிலி தன் கணவனைக்

காணச் சென்றபோது ஒரு திட்டத்துடன்தான் சென்றாள். அதைக் கணவனிடம் விளக்கியபோது முதலில் அவர் இணங்கவில்லை. ''முடியாது எமிலி, நீ அகப்பட்டுக் கொண்டால் இதற்காக அவர்கள் உன்னை மிகவும் துன்புறுத்துவார்கள்'' என்றார்.

''துன்பம், இப்போது நான் அனுபவிக்கும் துன்பத்தைவிடவா அவர்கள் எனக்குத் தரும் துன்பம் இருக்கப் போகிறது! நான் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?'' இதைச் சொன்ன போது அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. விம்மிக் குமைந்தாள்.

பதினைந்து நிமிஷங்களுக்கு ஒருமுறை ஜெயில் காவலாளி அங்கு வந்து எமிலியும் அவள் கணவனும் பேசிக் கொண்டிருப்பதைச் சிறைச்சாலை அறைக் கம்பிகளூடே பார்த்துவிட்டுப்போவது வழக்கம். அப்படி அவன் நோட்டமிட்டுவிட்டுப் போனதும் எமிலி கணவனிடம் தன் திட்டம் பற்றி மறுபடியும் மன்றாடினாள். ''நம் குழந்தையின் எதிர்காலத்தை எண்ணிப் பாருங்கள். நீங்கள் இல்லாமல் அந்த இளம் பிஞ்சு வறுமையிலும் வேதனையிலும் வாடி வதங்கி அழிந்து போகும்'' என்றாள். கடைசியில் அவரும் மனைவியின் திட்டத்துக்கு இணங்கினார். ''சரி, உன் இஷ்டப்படியே ஆகட்டும்.''

இரண்டாவது நாள் எமிலி, கணவனுடைய உயிர்த் தோழன் ஒருவனைச் சந்தித்துப் பேசினாள். அந்த உத்தம நண்பன் உதவுவதாக வாக்களித்தான். இதன் பிறகு எமிலி கான்வென்ட் பள்ளி



யில் தங்கிப் படித்து வந்த தன் ஒரே மகளை வரவழைத்தாள். அவளுக்குப் பன்னிரண்டு வயது. ஜோஸஃபைன் என்று பெயர். தன் முன்னால் நின்றிருந்த ஜோஸஃபைனிடம் எமிலி கூறினாள்:

''ஜோஸஃபைன்! நீ உன் அப்பாவைப் பார்த்து வெகுநாளாயிற்று, இல்லையா? தான் சிறையில் இருக்கும்போது என் மகள் என்னைக் காண வரவேண்டாம் என்று கூறியிருந்தார் உன் அப்பா. ஆனால் நாளைக்கு நீ என்னுடன் அப்பாவைப் பார்க்கச் சிறைச்சாலைக்கு வரப் போகிறாய். அதற்குமுன் நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேட்டுக் கொள்'' என்ற எமிலி தன் அருமை மகளிடம் நீண்ட நேரம் பேசினாள். பல விஷயங்களை அவளுக்கு விளக்கினாள். ''நான் சொன்னதையெல்லாம் நினைவில் வைத்துக் கொள். எங்கெங்கு காவல்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. உன் தகப்பனாரின் உயிர் உன் ஞாபக சக்தியில்தான் இருக்கிறது'' என்றாள் எமிலி. குழந்தை ஜோஸஃபையினின் முகம் வெளுத்துக் கிடந்தது. ஆனாலும் அவள் உறுதியாக, ''நான் எல்லாவற்றையும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுகிறேன் அம்மா'' என்றாள்.

மறு நாள் — அன்றுதான் அவள் கணவனுக்கு வாழ்நாளின் கடைசி நாள் — நீண்ட வெல்வெட் அங்கியையும் முகத்தை மறைக்கும் திரையோடு கூடிய பெரிய குல்லாயையும் அணிந்து கொண்டாள். மகள் ஜோஸஃபைனையும் அழைத்துக் கொண்டு கோச்சு வண்டியில் சிறைச்சாலைக்குக் கிளம்பினாள். சிறைக்கூடத்தின் வெளியே கோச்சு வண்டியைத் தனக்காகக் காத்திருக்கும்படி கூறிவிட்டு இருவரும் உள்ளே புகுந்தார்கள்.

லாவலட்டியின் அறையில் எமிலி கணவனுடன் ஆர்வமுடனும் தவிப்போடும் கிசுகிசுத்தாள். பதினைந்து நிமிஷங்களுக்கு ஒரு முறை காவலாளி இவர்களைக் கண்காணிக்க வரும்போதெல்லாம் அவன் காதில் விழும்படி எமிலி பலமாக விம்மி விம்மி அழுவாள், சந்திப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடியும் வேளையில், காவலாளியின் கடைசிக் கண்காணிப்புக்காகக் காத்திருந்தாள் எமிலி. அவனும் வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போனான். எமிலி அவசரம் அவசரமாகக் கணவனின் காதோடு கிசுகிசுத்தாள்.

''சீக்கிரம்.... சீக்கிரம்....'' என்று கூறியபடி கணவனின் கரத்தைப் பற்றி அங்கிருந்த ஒரு தடுப்புக்குப் பின்னே அழைத்துப் போனாள். அது கைதியின் சிறு அவஸ்தைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடம். ஒரு சில விநாடிகளில் கணவனும் மனைவியும் மறைவிடத்திலிருந்து சிரித்தபடியே வெளி வந்தார்கள். எமிலி தன் மகளைப் பார்த்து உற்சாகப்படுத்தும் விதமாக, ''இப்போது உன் அப்பா எப்படி இருக்கிறார், பார்த்தாயா ?'' என்று கேட்டாள். ஜோஸஃபைன் தன் தகப்பனாரைப் பார்த்தாள். 'நல்ல வேளை, அதிர்ஷ்டக்காரர் !.... குட்டையாக இருந்தாரோ...சௌகரியமாகப் போயிற்று. அம்மாவின் நீண்ட கோட்டு அப்பாவின் கால் பூட்ஸ் தெரியாதபடி மறைத்துவிட்டது. அதுமட்டுமல்ல. அப்பா தாடி வைத்துக் கொள்ளாததும் ஒரு சௌகரியம். அம்மாவின் திரையிட்ட பெரிய தொப்பி அவர் முகம் தெரியாதபடி மூடிக் கொண்டிருக்கிறது. இப்படி எண்ணித் திருப்திப்பட்டுக் கொண்டாள் ஜோஸஃபைன். திரும்பி வரும் காவலாளியின் காலடி ஓசை கேட்டது. ''கிளம்புங்கள். ம்... சீக்கிரம் கிளம்புங்கள்'' என்று ரகசியக் குரலில் துரிதப்படுத்தினாள் எமிலி.

வெளித் தோற்றத்துக்கு அம்மா போல் உள்ள அப்பாவின் கையைப் பற்றிக்கொண்டு ஜோஸஃபைன் கிளம்பினாள். பார்வையாளர் வெளியேறச் சிறைக் கதவு திறந்தே இருந்தது. உள்ளே திரைத் தடுப்புக்குப் பின்னால் எமிலி பேசினையும் ஜாடியையும் உருட்டி ஓசை உண்டாக்கினாள், கைதி முகம் கை கழுவிக் கொள்ளுவதாகக் காவலாளி நினைக்க வேண்டும் என்பதற்காக. அவனும் அது மாதிரியே எண்ணி அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு போனான்.

வெளியே சிறைக்கூடத்தினுள் ஜோஸஃபைன் இருண்ட ஆளோடிகளில் தகப்பனாருக்கு வழி காட்டிக்கொண்டு நடந்தாள். வந்த பாதைகளை நினைவில் கொண்டு ஒவ்வொரு தாழ்வான வாசல் படிகளிலும் அப்பாவுக்கு மட்டுமே கேட்கும்படி 'குனிந்து வாருங்கள்... குனியுங்கள்' என்று கூறிக் கொண்டு வந்தாள். பழக்கப்படாத தால் அந்தப் பெரிய பெண்கள் தொப்பி நிலைப்படி பட்டுச் சரிந்து விழாதிருக்கவே இந்த எச்சரிக்கை. அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு திருப்பத்திலும் காவல்காரர்கள் எங்கு நிற்பார்கள் என்பதை நினைவில் கொண்டு தகப்பனாரின் இடத்தை மாற்றிக் காவல்காரனுக்கும் அப்பாவுக்கும் இடையிலே

அட்டைப்பட ஆர்ட்டிஸ்ட் :

முகத்தில் ஒண்ணும் தோளில் ஒண்ணும் கண்ணிருக்குது — அந்த
முகமும் தோளும் வயிற்றுக்குள்ளே ஒளிஞ்சிருக்குது
இளைத்திடாமல் 'மாடர்ன் ஆர்ட்'டின் மர்மம் பாருங்க — நான்
தீட்டப்போகும் வயிற்றுப்பகுதி வெளியில் தானுங்க !

வண்ணப் படம் : கே. உதயகுமார் — குடுக்கையார்



தான் இருக்குமாறு பார்த்துக் கொண்டாள். தாயின் போதனை அப்படி.

கடைசிக் காவலாளி ஆதரவாக விடைகொடுக்கும்போது ஜோஸஃபைனுக்குச் சட்டென்று உடல் அதிர்ந்தது. காரணம் அந்தக் காவல்காரன் அவர்களிடமிருந்து 'டிப்ஸ்' எதிர்பார்த்தான். ஜோஸஃபைனிடம் பணம் ஏதுமில்லை. அப்பாவோ தம் கோட்டுப் பாக்கெட்டிலிருந்து எதையும் எடுக்க முடியாத நிலை. குட்டு வெளிப்பட்டுவிடுமே! அந்த நிலையிலும் சிறுமி ஜோஸஃபைன் நிலை கலங்கவில்லை. சமயோசிதமாக வாய் விட்டு விம்மி விம்மி அழலானாள் — தகப்பனாரின் பிரிவைத் தாங்காதவள் போல. அந்தப் பரிதாபத்தைக் காண விரும்பாதவன் போலக் காவலாளியும் அவர்களைப் போக விட்டு விலகிக் கொண்டான்.

ஜோஸஃபைன் தகப்பனாருடன் முன்னேறினாள். ஓர் இடத்திலும் அவள் தடுமாறவில்லை, பிசகிவிடவில்லை. சிறைச்சாலையைவிட்டு வெளியேறும் 'கார்டு ரூமு'க்கு வந்து சேர்ந்தார்கள். பார்வையாளர்கள் இங்கு தங்கள் வாகனங்கள் வருவதற்காகக் காத்திருப்பது வழக்கம். காவலாளியை அனுமதியின்றி அவன் பிரதான வாசல் கதவைத் திறக்கமாட்டான். சாவிக் கொத்து கையில் ஊசலாட அவன் சிலையாக நின்று கொண்டிருந்தான். கதவைத் திறக்கும்படி அவனிடம் கேட்டுக் கொள்ள வேண்டும். கேட்க வேண்டியது ஜோஸஃபைனின் தாயார். ஆனால் தாயாரின் அங்கியில் உள்ளே இருப்பதோ தகப்பனார். எப்படிக் கேட்பது? குரல் குட்டை உடைத்துவிடுமே! ஒவ்வொருவராக நகர்ந்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு விநாடியும் சிறுமி ஜோஸஃபைனுக்கு மரண அவஸ்தையாக இருந்தது. தகப்பனாரின் கையை அழுத்தி நிலைமையைச் சமாளிக்கும்படி குறிப்பாக உணர்த்தினாள். ஓரளவுக்குக் குரலை மாற்றிக் கொண்டு 'ஓபன் ப்ளீஸ்' என்றார் லாவ்லட்டி !

அப்பாடா ! கதவு திறக்கப்பட்டது. கடைசிக் காவல் கட்டத்தையும் கடந்து இருவரும் சுதந்திரமாக வெளியே வந்தார்கள். தங்கள் வருகைக்காகக் காத்திருந்த கோச்சு வண்டிக்கு விரைந்தார்கள். வண்டிக்காரனிடம் 'வேகமாகக் குதிரைகளை விரட்டி ஓட்டப்பா' என்று சொல்லத் துடித்தாள் சிறுமி. சிறைச்சாலைக்குள் அப்பா இருந்த அறையைக் காவல்காரன் இதற்குள் இரு தடவை கண்காணித்திருப்பான். அங்கு ஆண் கைதியைக் காணாது சந்தேகப்பட்டு உள்ளே நுழைந்து சோதிக்க, உண்மை வெளிப்பட, உடனே தேடு படை துரத்தி வருமுன் தப்பிவிட வேண்டும் என்று ஜோஸஃபைன் தவித்தாள். எமிலியின் திட்டமும் அதுதானே !

நல்ல வேளை! தெருவின் முடிவில் இவர்களுக்காக இன்னொரு குதிரை வண்டி தயாராகக் காத்திருந்தது. அந்த நல்ல நண்பர் வாக்களித்தபடி வண்டியோடு அங்கு இருந்தார். இவர்கள் கோச்சைக் கண்டதும் அவர் தம் வண்டியிலிருந்து விரைந்து ஓடி வந்து உரக்கக் கூவினார். ''அம்மணி, சீக்கிரம் வாருங்கள், இல்லாவிடில் தாமதமாகிவிடும்'' என்று கூறியபடியே 'அம்மணி' உடையிலிருந்த ஐயாவுக்குக் கைலாகு கொடுத்துத் தம் வண்டியில் போய் ஏறிக் கொள்ள உதவினார். எமிலியின் கணவர் அதில் ஏறிக் கொண்டதும் அந்த வண்டி புயல் எனக் கிளம்பி மறைந்தது. குழந்தை ஜோஸஃபைன் மகிழ்ச்சி நிறைந்த மனத்தோடு அந்த வண்டி மறைவதைப் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தாள். அதன் பிறகு அவள் தாயாரின் கட்டளைப்படி தனது கான்வெண்ட் நோக்கி அமைதியாக நடக்கலானாள்.

கான்வெண்டிலே தன் தாயாரை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் ஜோஸஃபைன். ஒரு மாதத்துக்குப் பிறகு எமிலி விடுதலையாகி மகளைச் சந்தித்தாள். தாயும் மகளும் மறுபடியும் ஒன்று சேர்ந்தார்கள். இருவருமாக ஆறு ஆண்டுகள் காத்திருந்தார்கள்.

லாவ்லட்டிக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை கிடைக்க அத்தனை காலமாயிற்று. பிரிந்தவர்கள் கூடினார்கள்.

குதிரையின் மூதாதையர்

கிருஷ்ணவேணி

புராதன மிருகங்களின் வரிசையில் யுண்டாதேரியம் (*Untatherium*) டிடானோதேரியம் (*Titanotherium*) பலூச்சிதேரியம் (*Baluchitherium*) ஆகிய மூன்றும் முக்கியமானவை. யுண்டாதேரியம் என்ற மிருகம் அது வாழ்ந்த பிரதேசத்தில் யுண்டா என்ற மலை இருந்ததால் அந்தப் பெயர் பெற்றது. உருவத்தில் பெரிதாக விளங்கிய இந்த மிருகத்தின் விசேஷம் இதன் முகத்தில் பல கொம்புகள் குறைந்தபட்சம் மூன்றாவது — இருந்ததுதான். டிடானோதேரியம் என்ற ராட்சத மிருகத்துக்கும் கொம்புகள் இருந்தன. ஆனால் அவை ஒரே ஒரு ஜோடி. மிக நீளமானவை. மூக்குக்குப் பின்னால் முளைத்திருந்த அக் கொம்புகள் முன் பக்கமாகவும் மேல் நோக்கியும் நீண்டிருந்தன. இந்தப் பெரிய மிருகத்தின் மண்டையோடு இதன் மூக்குக்குப் பின்புறமாகக் கீழ் நோக்கிக் குழிவாக வளைந்திருந்தது.


பலூச்சிதேரியம் என்ற மிருகம் ஆசியாவில் வாழ்ந்திருந்தது. இன்றைய காண்டாமிருகத்துக்கு மூதாதை இது. ஆனால் இன்றைய காண்டாமிருகத்தை விட மிகவும் பெரிதாக இருந்தது. பூமியில் வாழ்ந்த மம்மல்களிலெல்லாம் மிகப் பெரிதாக விளங்கியது பலூச்சிதேரியம். ஒட்டைச் சிவிங்கியின் அளவு உயரமுடையதாகவும் ராட்சத மிருகம் என்னும் சொல்லுக்கு இலக்கணமாக மிகுந்த நிறையுடையதாகவும் இருந்தது.

பூமியில் வாழ்ந்த ராட்சத மம்மல்களெல்லாமே அழிந்து மறைந்துவிடவில்லை. ஸூக்ளோடன் (*Zeuglodon*) என்பவை இன்று கடலில் வாழும் திமிங்கிலங்களின் மூதாதைகள்தான். என்பதிலிருந்து தொண்ணூறு அடி நீளம் வரை வளர்ந்திருக்கின்றன இவை. பண்டைக் காலத்து மாலுமிகள் கடலிலே தாங்கள் பிரும்மாண்டமான கடல் பாம்புகளைக் கண்டதாகக் கூறியுள்ள கதைகளெல்லாம் இந்த ஸூக்ளோடனைப் பற்றித்தான்.

இன்றைய மம்மல்களில் பலவற்றுக்கு மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட மூதாதையர் யார் என்பதை இனங்கண்டு கொள்ளலாம். இவற்றுக்கு இன்றைய உருவத்தைக் காலம் எப்படி அமைத்துக் கொடுத்திருக்கிறது என்பதும் சுவையான விஷயங்களாகும். இன்றையக் குதிரைகளின் மூதாதையர் எப்படி இருந்தார்கள் தெரியுமா? ஒரு சின்ன நாய்க்குட்டி அளவேதான். இயோஹிபஸ் (*Eohippus*) என்ற மிருகம்தான் இன்றைய கம்பீரமான குதிரைகளாகப் பரிணாமம் அடைந்திருக்கின்றது. வட அமெரிக்காவின் மேற்குப் பகுதிகள் ஐரோப்பா ஆகிய பகுதிகளின் சதுப்பு நிலக் கானகங்களில் வாழ்ந்திருந்தன இந்த இயோஹிபஸ். ஆதிக் குதிரைகளான இவற்றின் பிடரியில் ஒருசில கெட்டியான ரோமங்களே உண்டு. குட்டையான வாலும் கழுத்தும். மிருதுவான இலைகளை உண்ணுவதற்கு ஏற்ற வகையில் பற்கள். இதெல்லாவற்றையும் விட வியப்பான விஷயம் ஆதிகுதிரையான இயோஹிபஸுக்குக் குளம்புகள் கிடையா. முன்னங்கால்கள் இரண்டிலும் நான்கு நான்கு விரல்களும் பின்னங்கால்களில் மூன்று விரல்களும் இருந்தன. இயோஹிபஸ் தங்களுக்கும் முற்பட்டவர்களின் கால்களில் ஐந்து விரல்கள் இருந்தன என்பதன் அடையாளமாக இவற்றுக்குக் கால் எலும்புகளில் ஓர் அதிகப்படியான எலும்பு மிருந்தது.


மரங்களடர்ந்த சதுப்பு நிலப்பிரதேசத்தில் வாழ்வதற்கு ஏற்ற வகையில் இயோ





மெஸோஹிபஸ்

புரோடோஹிபஸ்



இயோஹிப்பஸ்

ஹிப்பஸின் உடல் அமைந்திருந்தது. மரங்களிடையே புகுந்து ஓடவும் மாமிச பட்சிணிகளான விரோதிகளிடமிருந்து தப்ப மர நிழல்களில் ஒளிந்து வாழவும் ஏற்றபடி இருந்தது இவற்றின் உடல். தாழ்ந்த மரக் கிளைகளிலிருந்தும், புதர்களிலிருந்தும் இலைகளைப் பறித்து உண்டு வாழ்ந்தன. சதுப்பு நிலங்களில் சுலபமாக நடப்பதற்கு ஏற்ற வகையில் இந்தச் சின்னக் குதிரையின் பாதங்கள் அமைந்திருந்தன.

கால வெள்ளத்தில் பருவ நிலைகளின் மாறுதலுக்கு ஏற்ப இயோஹிப்பஸ் வாழ்ந்த பகுதிகளிலும் மாறுதல் தோன்றியது. சதுப்பு நிலங்கள் காய்ந்து கெட்டிப்பட்டன. முன்பு மரங்களே இல்லாத பகுதிகளில் இப்போது ஏராளமான மரங்கள் தோன்றின. இயோஹிப்பஸ்களின் தலைமுறைகளிலும் மாறுதல் உண்டாயிற்று, பல நூற்றாண்டுகளில். இப்போது இதற்கு மெஸோஹிப்பஸ் (*Mesohippus*) என்று பெயர். அதாவது குதிரைக்கும் இயோஹிப்பஸுக்கும் இடைப்பட்ட ஓர் அமைப்பு.

மெஸோஹிப்பஸின் உருவம் ஒரு பெரிய ஓநாயின் அளவே இருந்தது. கொஞ்சமான பிடரி இருந்தது. ஆதி குதிரையைவிடக் கொஞ்சம் நீளமான வால். இதன் கால்களிலும் மாற்றம். ஒவ்வொரு காலிலும் மூன்று மூன்று விரல்கள் இருந்தன. நடுவிரல் மற்ற இரு விரல்களை விடப் பெரிதாக இருந்தது. இந்த நடு விரலில் கெட்டியான நகம் இருந்தது. குளம்பின் ஆரம்பத் தோற்றம்தான் இது.

பூமியின் நிலையில் மாற்றங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. மேற்குப் பகுதியும் மற்றும் மெஸோஹிப்பஸ்கள் வாழ்ந்த பிரதேசங்களும் வறண்டன. காடுகள் மறைந்தன. மரங்கள் அடர்ந்த பகுதிகள் புல்வெளிகளாயின. இந்த நிலையில் மெஸோஹிப்பஸ் தனது பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அன்று அப்படி அது சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொண்டிரா விட்டால் இன்று நம்மால் குதிரை என்ற மிருகத்தையே பார்த்திருக்க முடியாது.

தலைமுறைக்குத் தலைமுறை மெஸோஹிப்பஸ் தன்னை மாற்றிக் கொண்டது. தாழ்வான கிளைகள் உள்ள மரங்கள் அரிதாகிவிடவே புற்களைத் தின்பதற்கு ஏற்பத் தன் பற்களையும் மாற்றிக் கொண்டது. உயரமாக வளர்ந்தது. வேகமாக ஓடப் பழகிக் கொண்டது. கழுத்தும் நீண்டது. ஒளிந்து வாழ மறைவிடங்கள் இல்லாததால் இதன் தோற்றமும் ஓட்டமும் நல்ல பலனளித்தன. தன்னுடைய மூதாதையரை விட இதனால் வேகமாக ஓட முடிந்தது. காரணம் இது தன் நடுப் பெருவிரலால் மட்டுமே ஓடியது. ஓடும்போது மற்ற விரல்கள் பூமியில் பதிவதில்லை. பெருவிரலின் உறுதியான நகங்கள் குளம்புகள் போல் இயங்கின. சதுப்பு நிலமானால் இந்தக் குளம்பு அமைப்பு உபத்திரவமாக இருக்கும். காய்ந்த புல்லடர்ந்த நிலப் பரப்பில் இவை பாதம் பதித்து வேகமாக ஓட நடு விரல் நகங்கள் வசதியாக இருந்தன.

இப்படி நடு விரல் நகங்களால் ஓடிய குதிரைகளுக்கு புரோட்டோஹிப்பஸ் (*Protohippus*) என்று பெயர். அதாவது

ஒரு—அனுபவம்



வீட்டில் யாரும் இல்லை. போர் அடித்துக் கொண்டிருந்தது. துரு துரு என்று அலைந்து கொண்டிருந்தேன். அப்பொழுது என் தந்தையின் அறைக்குள் நுழைந்தேன். அங்கு மேசையின் மேல் சில மருந்துகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளைப் பார்த்தவுடன் எனக்கு ஓர் ஆர்வம் உண்டாயிற்று. அவைகளை ஒன்றுக்கொன்று கலந்து பார்த்தால் ரஸாயன மாற்றம் ஏதேனும் ஏற்படுமா என்று எனக்குத் தோன்றியது. உடனே எல்லாவற்றையும் ஒரு கண்ணாடி ஜாடியில் ஊற்றி அடுப்பில் வைத்தேன். சில நிமிடங்களுக்கு அந்த ஜாடியில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. ஆவலுடன் அந்த மருந்துகள் என்ன ஆயிற்றோ என்று பார்க்க ஜாடியுள் எட்டிப் பார்த்தேன். அவ்வளவுதான்; ''டமார்'' என்று அந்த ஜாடி வெடித்தது. நான் பயந்து கொண்டு வாசலில் ஓடினேன். அப்பொழுது என் தந்தையும் உள்ளே நுழைந்தார். ''என்னடா, உடம்பெல்லாம் ஒரே சாயம் ?'' என்றார். நான் உடனே நடந்ததைச் சொன்னேன். அன்றைக்கு வீட்டில் எனக்கு நல்ல அர்ச்சனை. அதிலிருந்து நான் விஷமம் செய்வதேயில்லை.

கே. ஆர். கல்யாணராமன்
வயது பன்னிரண்டு

'வெள்ளை' மனத்துக்குத் தரிசனம்

எங்கள் ஊர் மதுராந்தகம். இங்குள்ள பெருமாள் ஏரிகாத்த இராமர். இப்பெயர் வந்ததற்கு ஓர் உண்மையான வரலாறு உண்டு.

ப்ளேஸ் துரை என்னும் ஆங்கிலேயர் அப்போது செங்கல்பட்டு ஜில்லா கலெக்டராக இருந்தார். அப்போது மதுராந்தகத்தில் உள்ள ஏரி வருடந்தோறும் உடைத்துக் கொண்டு ஊருக்குச் சேதம் விளைவித்து வந்தது. என்ன செய்தும் இதை நிறுத்த முடியவில்லை. ஒரு மழைக் காலத்தில் ப்ளேஸ் துரை ஏரியைப் பார்வையிட வந்தார். அச் சமயத்தில் ஊர்க்காரர்கள் ஜனகவல்லித் தாயாருக்குச் சந்நிதி கட்ட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தனர். இதைப் பார்த்த துரை, ''உங்கள் ஊர் ராமர் இந்த வருடம் ஏரி உடையாமல் காப்பாற்றினுல் நானே என் செலவில் தாயாருக்குச் சந்நிதி கட்டித் தருகிறேன்'' என்று சொன்னார். அவ்வருடம் எப்போதும் பெய்யாத கனத்த மழை பெய்தது. மக்களும், கலெக்டரும் பல



அதிகாரிகளும் ஏரி உடைந்து ஊருக்குள் வெள்ளம் வந்து விடுமோ என்று பயந்து கொண்டிருந்தனர். ஏரியைக் கவனித்துக் கொண்டிருந்த ப்ளேஸ் துரைக்கு மட்டும் வில்லேந்தி இரு உருவங்கள் ஏரிக் கரையில் அங்குமிங்கும் நடந்து காவல் காப்பது தெரிந்தது. ஏரியும் உடையாமல் காப்பாற்றப்பட்டது. ஏரியைக் காத்தது இராமன்தான் என்பதை உணர்ந்த கலெக்டரும் தம் வாக்கின்படி தாயார் சந்நிதியைக் கட்டிக் கொடுத்தார். இவ் விவரங்கள் கல்லில் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

வைஜயந்திமாலா
வயது பதினொன்று

இன்றைய குதிரைகளுக்குச் சற்று முற்பட்டது என்று பொருள். இது கிட்டத்தட்ட குதிரை போலவேதான் இருந்தது. நாளாக நாளாக இதன் வளர்ச்சியில் பூரணத்துவம் பெற்றது. உருவத்தில் பெரிதாகியது. தேவையற்ற விரல்கள் மறைந்தன. இன்றைய குதிரை தம் முன்னோர்கள் பல விரல்களோடு வாழ்ந்திருந்தவர்கள் என்ற அடையாளங்களைக் கொண்டிருப்பதைக் காணலாம். பாதப் பகுதியில் தோலுக்குள்ளே அதிகப்படியான விரல்களின் எலும்புத் துண்டுகள் உள்ளன. பிடரியிலும் வாலிலும் அடர்ந்த ரோமமும் நிமிர்ந்த கம்பீரமான தோற்றமும் ஓட்டத்தின் வேகமும் புரோடோஹிபஸைக் குதிரைகளாக்கின. இனி இன்றைய யானையின் பரிணாமம் எப்படி ஏற்பட்டது என்பதைப் பார்ப்போம்.

(தொடரும்)



புதிய வடை

பாட்டி சுடும் வடை
பக்க மிருக்கு கடை
போட்டி போட்டுத் தின்னும்
புதிய பெரிய வடை

காரம் போட்ட வடை
கண்டால் வேக நடை
நேரத் தோடு தின்றால்
நிறையக் காட்டும் எடை

— வேட்டைநல்லூர் தமிழன்பன்

வீட்டுத் தோட்டம்

வீட்டுக் காகக் காய்கறி
விளைவ தற்கு என்றுநாம்
தோட்டம் ஒன்று வீட்டிலே
சிறிய தாகப் போடலாம்.

பச்சை யான கீரைகள்
பளப ளக்க அடிக்கடி
இச்சை யோடு கிள்ளியே
இனிய கூட்டு வைக்கலாம்.

வெண்டைச் செடியும் நல்லதாய்
மிளகுச் செடியும் வைக்கலாம்
குண்டு குண்டாய்க் காய்த்திட
கூட்டு வைத்துத் தின்னலாம்.

அவரை விதை ஊன்றியே
அழகுப் பந்தல் போடலாம்
சுவைத்துச் சுவைத்துத் தின்னலாம்
தெரிந்த வர்க்கும் கொடுக்கலாம்.

— அழகனூர்

மழை!

மேகம் இடியாய் இடிக்குது !
மின்னல் வானைப் பிளக்குது !
வேகம் ஓங்கிக் காற்றுதான்
வீசி எங்கும் அடிக்குது !

மரங்கள் செடிகள் ஒடிக்குது !
மழையோ எங்கும் பெய்யுது !
குரங்கோ நடுங்கித் துடிக்குது !
குளிரோ எங்கும் நடுக்குது !

தண்ணீர் பெருகி ஓடுது !
தவளை ராகம் பாடுது !
பண்ணைக் குயில்தான் கூவுது !
பரதம் மயில்தான் ஆடுது !

வண்டு சுற்றித் திரியுது !
வான வில்லும் தெரியுது !
நண்டுக் கூட்டம் அலையுது !
நன்றாய் மழைதான் பொழியுது !

மண்ணில் பெய்த மழையினால்
மக்கள் நெஞ்சம் குளிருது !
கண்ணில் கண்ட தெய்வமாய்க்
கருதி மழையைப் போற்றுது !

— நெல்லை ஆ. கணபதி



சுண்டெலி மணமகள்

வித்யா

முன்னொரு காலத்தில் ஹரீஷ் என்று ஒருவன் இருந்தான். அவன் சதா தன் எதிர்காலத்தைப் பற்றி எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருப்பான். ஒரு நாள் ஊரின் மிகப் பிரபல ஜோதிடரிடம் சென்று தன் எதிர்காலத்தைப் பற்றிக் கூறுமாறு வேண்டிக் கொண்டான்.

ஜோதிடர், "உனக்கு மூன்று குமாரர்கள் பிறப்பார்கள். ஒவ்வொரு பிள்ளை பிறக்கும்போதும் நீ ஒரு மரத்தை நட வேண்டும். உன் மகனுக்கு வைக்கும் பெயரையே அந்த மரத்துக்கும் வைத்து அழைக்க வேண்டும். பிள்ளைகள் வளர்ந்து, பெரியவர்களாகி மணந்து கொள்ள விரும்பும் போது, அவரவர்கள் பெயருள்ள மரத்தை அவர்களைவிட்டே வெட்டி விழ்த்தச் சொல்: எந்தத் திசையில் அந்த மரம் விழுகிறதோ அந்தத் திசையில் அவன் தன் மனைவியைத் தேடிப் போக வேண்டும். என் வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொள். உனக்கு நல்லது உண்டாகும்" என்றார்.

ஜோதிடர் கூறியபடியே ஹரீஷ் செய்தான். முதல் மகன் பிறந்ததும் ஒரு வேப்ப மரத்தை நட்டான். தன் குமாரனையும், மரத்தையும் ராஜேஷ் என்று அழைத்தான். இரண்டாவது மகன் பிறந்ததும் ஓர் அரச மரத்தை நட்டான். இரண்டாவது மகனுக்கும், மரத்துக்கும் சதீஷ் என்று பெயரிட்டான். மூன்றாவது பிள்ளை பிறந்ததும் ஒரு மா மரத்தை நட்டு கிரீஷ் என்று பெயர் சூட்டினான்.


பிள்ளைகள் வளர வளர மரங்களும் வளர்ந்தன. மூன்று குமாரர்களும் வாலிப வயதை அடைந்தபோது அவர்கள் பெயர்களைக் கொண்ட மரங்கள் உயரமாகவும், அடர்ந்தும் வளர்ந்து அழகுறத் திகழ்ந்தன.

ஒரு நாள் ஹரீஷின் மூன்று புத்திரர்களும் அவனிடம் வந்து, "அப்பா! எங்களுக்குரிய மனைவியை நாங்கள் தேடிக் கொள்ளும் தருணம் வந்துவிட்டது" என்றனர். ஜோதிடர் சொன்னதை நினைவுபடுத்திக் கொண்ட ஹரீஷ் அவர்களைத் தத்தம் பெயர் கொண்ட மரத்தை வெட்டி விழ்த்துமாறு பணித்தான்.

ராஜேஷ் வெட்டிய மரம் ஒரு செல்வந்தனின் வீடு இருந்த திக்கில் விழ்ந்தது. சதீஷின் மரம் ஒரு விவசாயியின் இல்லம் இருந்த திசையில் சாய்ந்தது. ஆனால் கிரீஷ் வெட்டிய மரமோ அடர்ந்த காடு இருந்த திக்கை நோக்கி விழ்ந்தது.

கிரீஷ் காட்டை நோக்கி நடக்கையில் தனக்கு எம்மாதிரியான மனைவி கிடைக்கப் போகிறாளோ என்று எண்ணியபடி சென்றான். மூன்று நாட்கள் காட்டுக்குள் அலைந்தும் ஒருவரும் கண்ணுக்குப் படவில்லை. கடைசியாக அவன் மரங்கள் அதிகமற்ற ஓர் இடத்தை அடைந்த போது மரக் கட்டைகளால் கட்டப்பட்ட ஒரு சிறிய வீட்டைக் கண்டான். கதவைத் தட்டினான். ஆனால் ஒருவரும் பதில் அளிக்கவில்லை. மெதுவாகக் கதவைத் தள்ளவே அது திறந்து கொண்டது. அறையினுள் ஒருவரும் இல்லை.

நீண்ட பயணத்தால் கிரீஷ் களைப்படைந்திருந்தான். வீட்டுக்குள் ஒருவரும் இல்லாததைக் கண்டதும் அவன் ஏமாற்றம் அடைந்தான். அந்த அறையின் நடுவே ஒரு மேஜை இருந்தது.



மேஜையின் மேல் ஒரு சிறிய சாம்பல் நிறச் சுண்டெலி உட்கார்ந்து கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. நீல நிற விழிகளும், கூரான வெள்ளை மூக்கும் கொண்ட அந்தச் சுண்டெலி, "அன்பரே உங்களுக்கு நல்வரவு. ஏன் கவலையுடன் இருக்கிறீர்கள் ?" என்று தன் கீச்சுக் குரலில் கேட்டது.

"நீயும் மூன்று நாட்கள் அலைந்து திரிந்து. தேடிவந்த மணமகள் கிடைக்கா விட்டால் உனக்குக்கூடத்தான் வருத்த மாக இருக்கும்" என்றான் கிரீஷ்.

"அப்படியானால் என்னை மணந்து கொள்ளேன்" என்றது சுண்டெலி.

"ஹா... ஹா... ஹா..." என்று நகைத்தான் கிரீஷ்.

"என்னை மணந்து கொள்" என்று மீண்டும் கூறிய சுண்டெலி, "அதற்காக நீ வருத்தப்படமாட்டாய்" என்றது.

"நான் இப்போது இருக்கும் நிலையில் உன்னை மணந்து கொள்வது ஒன்றும் மோசமாகாது" என்றான் கிரீஷ்.

"நீ மீண்டும் வரும்போது நான் உனக்காக இங்கே காத்திருப்பேன்" என்றது சுண்டெலி.

கிரீஷ் கதவைத் தன் பின்னால் இழுத்துச் சாத்திவிட்டுக் கவலை தோய்ந்த முகத்துடன் வீடு நோக்கி நடையைக் கட்டினான்.

அவன் வீட்டை அடைந்ததும் அவன் தந்தையும், சகோதரர்களும், "காட்டிலே எந்த மாதிரிக் கன்னியைக் கண்டாய் ?" என்று வினவினர்.

"மிக நல்ல மனைவியை" என்று கூறினான் கிரீஷ்.

"அவளைப் பற்றி விவரமாகக் கூறு" என்று கேட்டனர் அவர்கள்.

"அவளைப் பற்றிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. அவள் கண்கள் நீலமாக இருக்கின்றன. அவள் மூக்கு ரொம்ப வெளுப்பாக இருக்கிறது."

"நீலக் கண்கள், வெள்ளை மூக்கு ! வேடிக்கையாக இருக்கிறதே!" என்றவர்கள் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

பிறகு ராஜேஷும், சதீஷும் தங்கள் அதிர்ஷ்டங்களை விளக்க ஆரம்பித்தனர். தாங்கள் கண்டு வந்த கன்னியரைப் பற்றி மணிக்கணக்கில் வாய் ஓயாது வர்ணித்துத் தீர்த்தனர். பாவம், கிரீஷ் இதெல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்து விட்டுத் துயரத்துடன் துயிலச்சென்றான்.

மறு நாள் காலை ஹரீஷ் தன் மூன்று புதல்வர்களையும் அழைத்து, "இன்று நீங்கள் உங்கள் மணப் பெண்களைச் சந்தித்து, அவர்களே தயாரித்த ரொட்டிகளை வாங்கி வர வேண்டும். யார் சமையற் கலையில் சிறந்தவர் என்பதை நான் கண்டுபிடிக்க வேண்டும்" என்றான்.

"அதுவும் நல்ல யோசனைதான்" என்று பதில் அளித்த ராஜேஷும், சதீஷும் உடனே புறப்பட்டுவிட்டனர். பாவம்! கிரீஷ் மெள்ளத் தன் சுண்டெலிப் பெண்ணைக் காணப் புறப்பட்டான்.

அவன் குடிசைக் கதவைத் திறந்ததும் மேசையின் மேல் சுண்டெலி அமர்ந்திருப்பதைக் கண்டான்.


"நான் ஏதாவது செய்ய வேண்டுமா, உங்களுக்கு?" என்று கேட்டது சுண்டெலி.


"என் தகப்பனார் உன் சமையலை ருசி பார்க்க வேண்டுமாம். நீ எனக்கு ஒரு ரொட்டி செய்து கொடுப்பாயா ?" என்று கேட்டான் கிரீஷ்.

"செய்து தருகிறேன்" என்றது எலி.

பின்னர் அது ஒரு சின்னஞ் சிறிய மணியைக் குலுக்கிக் "கிணி கிணி" என்று ஒலி எழுப்பியது. மணியோசைக் கேட்ட மாத்திரத்தில் ஓராயிரம் எலிகள் முன்னங் கால்களைத் தூக்கியபடி நாட்டியமாடிக் கொண்டு வந்தன. சுண்டெலி மணமகள் அவைகளைப் பார்த்து, "நீங்கள் ஒவ்வொருவரும் மிகச் சிறந்த கோதுமை மணிகளை எனக்குக் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்" என்று ஆணையிட்டது.

உடனே வெளியே ஓடிய எலிகள் கணப்பொழுதில் திரும்பி வந்தன. ஒவ்வொன்றும்ஒவ்வொரு கோதுமை கொண்டுவந்திருந்தன. சுண்டெலி மணமகள் கோது





மையை அரைத்து மாவாக்கி ரொட்டி தயாரித்தது. ஓர் எலி, இம்மாதிரி வீட்டு வேலைகளைப் பாங்குடன் செய்வது கிரீஷுக்கு விநோதமாக இருந்தது. ஆனாலும் அவன் கேள்வி ஏதும் கேட்கவில்லை. அவன் சுண்டெலி மணமகளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு ரொட்டியுடன் வீடு திரும்பினான்.

ராஜேஷ் சோள மாவினால் தயாரிக்கப்பட்ட ரொட்டி கொண்டு வந்திருந்தான். சதீஷின் ரொட்டி, பார்லி மாவினால் செய்யப்பட்டது. கிரீஷ் கொண்டு வந்த ரொட்டி உயர்தரமான கோதுமை மாவினால் செய்யப்பட்டிருப்பதைப் பார்த்த தந்தையின் கண்கள் வியப்பினால் விரிந்தன. மூன்று ரொட்டிகளையும் அவர் நன்றாக ஆராய்ந்து பார்த்தார். பிறகு, ''இப்போது நீங்கள் உங்கள் மணப் பெண்கள் தத்தம் கைகளால் நெய்த ஒரு துண்டுத் துணி கொண்டு வாருங்கள். எவர் கைவேலையில் சிறந்தவர் என்பதை நான் கண்டறிய வேண்டும்'' என்றார்.

கிரீஷ் குடிசையின் கதவைத் திறந்ததும் சுண்டெலி கேட்டது, ''என்னிடமிருந்து ஏதாவது உதவி தேவையா ?''

''நீ உன் கையாலேயே நெய்த ஒரு துண்டுத் துணி வேண்டுமாம் என் தந்தைக்கு.''

''ஒரு துண்டுத் துணியா? அது என்ன பிரமாதம்!'' என்றது சுண்டெலி.

அது மறுபடியும் மணியை அடித்தது. இம்முறையும் ஓராயிரம் சுண்டெலிகள் ஆடிக் கொண்டு வந்தன.

''நீங்கள் ஒவ்வொருவரும் ஓர் உயர்ந்தரகப் பஞ்சு கொண்டு வரவேண்டும். நினைவிருக்கட்டும். பொழுதை வீணாக்காதீர்கள்'' என்றது சுண்டெலி மணப்பெண்.

வெளியே ஓடிய ஓராயிரம் எலிகளும் கண்ணிமைக்கும் நேரத்தில் திரும்பி வந்தன. ஒவ்வொன்றும் மிக மிக உயர்ந்த ரகப் பருத்தியைக் கொண்டு வந்திருந்தது.

''நீங்கள் யாவரும் எனக்கு உதவி செய்ய வேண்டும்'' என்றது சுண்டெலி மணமகள்.

எலிகள் யாவும் சுறுசுறுப்புடன் இயங்கின. சில எலிகள் பருத்தியிலிருந்து கொட்டையை நீக்கிச் சுத்தப்படுத்த, இன்னும் சில எலிகள் நூல் நூற்றன. சுண்டெலி மணமகள் தானே நெய்தது. வெகு விரைவில் துண்டுத் துணி நெய்யப்பட்டுவிட்டது. மணமகள் துணியைச் சுத்தமாக மடித்து ஒரு வாதுமைக் கொட்டையின் ஓட்டுக்குள் வைத்துக் கொடுத்தாள். கிரீஷ் அவளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, தன் சட்டைப் பைக்குள் கொட்டையின் ஓட்டைப் போட்டுக் கொண்டு வீட்டுக்கு விரைந்தான்.

அவன் தந்தையும், தமையன்களும் அவன் வரவு நோக்கிக் காத்திருந்தனர். ராஜேஷ் தன் சதுரத் துணியைப் பெருமையுடன் காண்பித்தான். அது கெட்டியாகவும், முரடு தட்டியும் இருந்தது. சதீஷின் மணமகள் நெய்தது இழைகள் தளர்த்தியாகவும், சீரற்றதாகவும் விளங்கியது. இந்த இரண்டு துணிகளையும் பார்வையிட்ட தந்தை ஒன்றும் கூறவில்லை. பிறகு அவர் கிரீஷின் பக்கம் திரும்பி, ''உன் துணி எங்கே ?'' என்றார்.

''அது ரொம்பச் சின்னதாக இருக்கிறது. காண்பிப்பதால் பயன் ஏதுமில்லை'' என்று முணுமுணுத்தவாறே தன் சட்டைப் பையிலிருந்த வாதுமைக் கொட்டையை வெளியே எடுத்தான் கிரீஷ்.

வாதுமைக் கொட்டையைப் பார்த்த அண்ணன்மார் இருவருக்கும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. அவர்கள் தந்தை வாதுமை ஓட்டைத் திறந்து அதனுள்ளிருந்த துணியை வெளியே இழுத்தார். மிக நேர்த்தியாக நெய்யப்பட்டிருந்த அந்தத் துணி ஐம்பது கஜ நீளமிருந்தது. இந்த அற்புதத் துணிக்கு நிகரான ஒன்றை அவர் கண்டதே இல்லையாதலால் அவர் மெய் சிலிர்த்துப் போனார். ஆனாலும் அவர் ஒன்றும் சொல்லவில்லை.

சில நாட்கள் கழித்து ஹரீஷ் தன் மக்களை மீண்டும் ஒன்றாக அழைத்தார்.

''வசந்தகாலம் ஆரம்பமாகிவிட்டது. நீங்கள் சென்று உங்கள் மணப் பெண்களை அழைத்து வாருங்கள். உங்களில் யார் புத்திசாலித்தனமாய்ப் பெண்ணைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் என்பதை நான் பார்க்க வேண்டும். பிறகு நல்லதொரு நாளில் மூவருக்கும் திருமணமாகும்'' என்றார் ஹரீஷ்.

ராஜேஷும், சதீஷும் ஆனந்த மிகுதியினால் துள்ளிக் குதித்தனர். தம் மணப் பெண்களை அழைத்து வர ஓடினர். பாவம், கிரீஷ் என்ன செய்வதென்றே அவனுக்குத் தெரியவில்லை. கனவில் நடக்கும் மனிதனைப் போலத் தளர்நடை போடலானான்.

சின்னஞ் சிறு காட்டு வீட்டை அடைந்ததும் எலிப் பெண்ணைப் பார்த்து ''என்னுடன் வா. என் தந்தை உன்னைச் சந்திக்க விரும்புகிறார்'' என்றான்.

''அவர் விரும்புவதால் நாம் இருவரும் சேர்ந்தே செல்லலாம்'' என்றது சுண்டெலி தன் மெல்லிய குரலில்.

முதல் பக்கத்துக்குக் கொசுறு!

வேண்டாமை!

● உங்களிடம் உள்ள கைப்பை சின்னதாக இருக்கக்கூடாது. சற்றுப் பெரிதாகவே இருக்கட்டும்.

● நடக்கும்போது தோள் பட்டைகளைச் சரிய விட்டபடியோ தலை குனிந்தோ நடக்காதீர்கள். தலை நிமிர்ந்து, நடவுங்கள்.

● நீண்ட முடி உடையவர்களானால் அதைப் புசுபுசுவென்று வைத்துக் கொள்ளாதீர்கள். 'பாப்' செய்த தலையானாலும் நீண்ட முடியுடையவர்களானாலும் தலை மயிரை அழுந்த வாரிப் படிய வைத்துக் கொள்ளுங்கள்.

● புரூச் போன்ற அழகு நகைகள் அணிவதானால் சின்னஞ் சிறியதாக இருக்கக் கூடாது. பெரிய நகைகளையே அணிந்து கொள்ளுங்கள்.

● குட்டையான ஸ்கர்ட் அணியாதீர்கள்! முழங்காலுக்குக் கீழே ஒன்றரை அங்குலமாவது தழைவாக இருக்க வேண்டும்.

சுண்டெலி தன் சிறிய மணியை அடித்தது. இம்முறை அறைக்குள் ஐந்து அழகான சுண்டெலிகள் நுழைந்தன. அவை சின்னஞ் சிறிய கோச்சு வண்டியொன்றை இழுத்தபடி வந்தன.

சுண்டெலி மணமகள் வண்டிக்குள் ஏறி அமர்ந்தபடி புறப்படத் தயாராகியது.

''நான் உன்னை இப்படியே என் தந்தையிடம் எப்படி அழைத்துப் போவது? நீ இவ்வளவு சின்னதாக இருப்பதைப் பார்த்தால் என் சகோதரர்கள் கேலி செய்வார்கள். என் தகப்பனார் கோபமடையக் கூடும்'' என்றான் கிரீஷ்.

''பயப்படாதே. நான் சொல்கிறபடி செய்தால் உனக்கு நன்மை உண்டாகும்'' என்று தைரியம் சொன்னது சுண்டெலி.

தாவிக் குதித்தபடி ஐந்து சுண்டெலிகள் வண்டியை இழுக்க ஆரம்பித்தன. அழுவதா, சிரிப்பதா என்று தவித்தபடி கிரீஷ் வண்டியின் பின்னால் மெள்ள நடக்கலானான்.

அவர்கள் பயணம் தொடங்கிய இரண்டாம் நாளன்று ஒரு நதியின் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த பாலத்தின் மேல் செல்ல வேண்டி வந்தது. பாலத்தின் நடுவில் ஒரு முரட்டு, அவலட்சணப் பையனை அவர்கள் சந்திக்க நேரிட்டது.

''எலி வண்டியின் பின்னாலே நடந்து போய் என்னடா செய்யப் போகிறாய்?'' என்று கிரீஷைப் பார்த்துத் தன் கட்டைக் குரலில் கூவிய அவன், கிரீஷ் தடுப்பதற்கு முன்னால் தன் அழுக்குக் கால்களால் வண்டியை ஓர் உதை கொடுத்தான். மறு நிமிஷம், ஐந்து சுண்டெலிகள், குட்டி வண்டி, நம் சுண்டெலி மணமகள் யாவரும் எகிறிப் போய் ஓடும் நதி நீரில் விழுந்தனர். தண்ணீர் சிதறும் சப்தம். மறு விநாடி எல்லோரும் போன இடம் தெரியவில்லை.

வண்டி நீருக்குள் மறைந்ததுமே முரட்டுப் பையன் ஓட்டமெடுத்து விட்டான். கிரீஷ் தன் மணமகளுக்கு நேர்ந்த கதியைப் பார்க்கத் திரும்பினான். அங்கே...!

ஐந்து அற்புதக் குதிரைகள், தகதகக்கும் பொன் வண்ண வண்டியை இழுத்துக்கொண்டு நதியினுள்ளிருந்து வெளிப்பட்டன. வண்டிக்குள்ளே பேரழகு வாய்ந்த பெண்ணொருத்தி கம்பீரமாக வீற்றிருந்தாள். வண்டியைப் பாலத்தின் மேல் ஓட்டி வந்த அவள் கிரீஷ் அருகே வந்து நிறுத்தினாள்.

''என்னோடு நீங்கள் வரவில்லையா?'' என்று தேனினுமினிய குரலில் கேட்டாள். திக்பிரமை அடைந்து போன கிரீஷ் தன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டான்.

''என்னைத் தெரியவில்லையா? நான் தான் நீங்கள் மணக்கப் போகும் சுண்டெலி மணமகள். வண்டிக்குள் வந்து என்னருகே அமருங்கள். எல்லாவற்றையும் விவரமாகக் கூறுகிறேன்'' என்றாள்.

கிரீஷ் வண்டிக்குள் அவளருகே அமர்ந்தான். குதிரைகளைச் செலுத்த கடிவாளக் கயிற்றைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். அவர்கள் பயணத்தைத் தொடர்ந்தபோது மணமகள் தன் கதையைக் கூறலானாள்.

''நான் ஓர் அரசனின் மகள். ஒரு மந்திரக்காரி என் அழகைக் கண்டு பொறாமை கொண்டு என் பதினைந்தாவது வயதில் என்னையும் என் தோழிகள் அனைவரையும் சுண்டெலிகளாக மாற்றி விட்டாள். வாலிபன் ஒருவன் என்னை மணக்க முன்வரும்போதும், இன்னொரு வாலிபன் என்னைக் கொல்ல நினைக்கும் போதும்தான் இந்த மந்திர சக்தி நீங்கும் என்றிருந்தது. நீங்கள் என்னை மணக்க



ADWAVE-IRC-151 TAM

ஒப்புக் கொண்டார்கள். பாலத்தின் நடுவே நான் சந்தித்த முரட்டுப்பையன் என்னை நீருக்குள் தூக்கி எறிந்து மூழ் கடிக்கப் பார்த்தான். எனவே என் மேல் இருந்த மந்திர சக்தி நீங்கி விட்டது. நான் என் பழைய உரு வத்தை அடைந்து விட்டேன்.''

இதைக் கேட்ட கிரீஷ் எல்லையில்லா ஆனந்தம் அடைந்தான்.

''உன் பெயர் என்ன என்று என் தந்தையார் கேட்டால் நான் என்ன சொல்வது?'' என்று அவளை வினவினான் கிரீஷ்.

''என்னைச் சித்ரலேகா என்று அழை யுங்கள்'' என்றாள் அவள்.

வழக்கம்போல் ராஜேஷும், சதீ ஷும் முன்னதாகவே திரும்பியிருந் தனர் தத்தம் மணப் பெண்களுடன். கிரீஷ் ஐந்து குதிரைகள் பூட்டிய வண் டியில் வருவதைக் கண்ட அவர்களால் தம் கண்களையே நம்ப முடியவில்லை. சித்ரலேகாவின் ஒப்பிலா அழகு அவர் களை மேலும் பிரமிக்க வைத்தது. இந்த மாதிரி அழகான ஒரு பெண்ணை அவர்கள் பார்த்ததே இல்லை.


ஹரீஷின் மாளிகையில் அவனது மூன்று குமாரர்களுக்கும் ஜாம் ஜாம் என்று திருமணம் நடந்தேறியது. மா இலைத் தோரணங்களும், மலர் மாலை களும் வீட்டை அலங்கரித்தன. நாதஸ் வரக் கலைஞர்கள் தங்கள் இசைத் திறனையெல்லாம் வெளிக் காட்டி மங் கள நாதம் எழுப்பினர். கிராமத்து மக்கள் பூரணச் சந்திரனின் ஒளியிலே இரவு முழுவதும் ஆடிப் பாடிக் களித் தனர். தன் புது மணமக்களைக் கண்டு பூரித்துப் போனான் ஹரீஷ்.

கொண்டாட்டமெல்லாம் ஓய்ந்த தும் கிரீஷும் சித்ரலேகாவும் தங்கள் ஐந்து குதிரை வண்டியில் ஏறிக்கொண் டனர். குதிரைகள் காட்டை நோக்கிப் பாய்ந்தோடின.

அவர்கள் காட்டுக் குடிசை இருந்த இடத்தை அடைந்தபோது கிரீஷுக்கு இன்னோர் அதிசயம் காத்திருந்தது. சின்னஞ் சிறு குடிசை எழில் மிக்கதொரு கோட்டையாகி யிருந்தது. அவர்களை வரவேற்கப் பணியாட்கள் ஓடிவந் தனர்

''மந்திரக்காரி சாபம் கொடுப்பதற்கு முன்னால் இந்தக் கோட்டையில்தான் நான் வசித்து வந்தேன்'' என்றாள் சித்ரலேகா!

அந்தக் காட்டுக் கோட்டையிலே கிரீஷும் சித்ரலேகாவும் சந்தோஷ மாக நீண்ட நாட்கள் வாழ்ந்தார்கள்.



நாஸிருத்தீன் நகைச்சுவைகள்!

பக்கத்து வீட்டுக்காரன் பணிவுடன் கேட்டான்:
''முல்லா, உமது கழுதையைக் கடன் கொடுக்கிறீரா?''
''மன்னிக்கவும். அதை இரவல் கொடுத்திருக்கிறேன்,''
முல்லா சொல்லி முடிப்பதற்குள் உள்ளே கழுதை கனைத்தது! ''அதோ உமது கழுதை குரல் கொடுக்கிறதே?'' என்றான் பக்கத்து வீட்டுக்காரன்.
கரகரவென்று அவனை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினர் முல்லா. ''மடையன்! கழுதையின் குரலில் நம்பிக்கை இருக்கிறது; என் பேச்சில் நம்பிக்கை இல்லை! இத்தகைய நம்பிக்கையற்ற மனிதர்கள் கடன் வாங்க லாயக்கில்லை!'' என்று திட்டிக் கொண்டிருந்தார்.

முல்லா நாஸிருத்தீனின் பக்கத்து வீட்டுக்காரர் துணி உலர்த்தும் கொடியை இரவல் கேட்டார்.
''அடடா! அதில் மாவு உலர்த்தி யிருக்கிறேனே!'' என்றார் முல்லா.
''துணி உலர்த்தும் கொடியில் எப்படி மாவு உலர்த்த முடியும்?''
''இரவல் கொடுப்பதைக் காட்டிலும் அது சுலபம்தான்!'' என்றார் முல்லா!

ஒரு சிறுவனைத் தண்ணீர் மொண்டுவரக் கிணற்றுக்கு அனுப்பினர் முல்லா. ''ஜாக்கிரதை! பானையை உடைத்து விடாதே'' என்று சொல்லி அவன் தலையில் நறுக்கென்று குட்டினர்.
இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவன் பதறினன். ''முல்லா! தவறு இழைக்காத அச்சிறுவனை எதற்காகத் தண்டிக்கிறீர்?'' என்று கேட்டான்.
''முட்டாளே! பானையை உடைத்தபிறகு அவனைத் தண்டித்து என்ன பயன்?'' என்றார் முல்லா!

தொகுத்தவர்: **என். எஸ். நாதன்**



பட்டாளத்துக்கு ஒரு வேட்டிக்காட்டான்!



ஒரு கிராமவாசி ராணுவத்தில் சேருவதற்காக ஆள் தேர்ந்தெடுக்கும் இடத்துக்குச் சென்றுன். அங்கே தேர்ந்தெடுக்கும் அதிகாரி அவனைச் சேர்த்துக் கொள்வதாகச் சொன்ன பின் அவன் விருப்பத்தைக் கேட்டார். ''படையில் நீ எந்தப் பிரிவில் இருக்க ஆசைப்படுகிருய்?''

அவன் பதிலளித்தான்: ''படையின் தளபதியாக.''

''என்ன? தளபதியாகவா! உனக்குப் பைத்தியம் ஏதாவது பிடித்திருக்கிறதா?''

''தளபதியாக இருக்கப் பைத்தியம் வேறு பிடிக்கவேண்டுமா? அப்படியானல் சாதாரணச் சிப்பாய் பதவியே போதும்'' என்றுன் கிராமவாசி.

ஜி. காளீஸ்வரன்

இடமறிந்து சொல்

ஸ்டேடியம்	இருக்குமிடம்
பாரபட்டி ஸ்டேடியம்	கட்டாக்
பார்போர்ன் ஸ்டேடியம்	பம்பாய்
ஏடன் கார்டன்ஸ்	கல்கத்தா
கென்னம் ஸ்டேடியம்	ஜாம்ஷெட்பூர்
கிரீன்பார்க்	கான்பூர்
சென்ட்ரல் ஸ்போர்ட்ஸ் ஸ்டேடியம்	லக்னே
நேஷனல் ஸ்டேடியம்	புதுதில்லி
நேரு ஸ்டேடியம்	சென்னை
ரஞ்சித் ஸ்டேடியம்	கல்கத்தா
வல்லபபாய் படேல் ஸ்டேடியம்	பம்பாய்
யதிவிந்த்ரா ஸ்டேடியம்	பாட்டியாலா

தகவல்: '**ஆழ்வை அபரா**'

காணாமல் போன கதாநாயகன்

கவிஞர் தமிழ்முடி

எப்பொழுதும் பாட்டும் வேடிக்கையு மாக இருப்பவர் அந்தப் புலவர். ஆனால் ஏனோ அன்று வழக்கத்துக்கு மாறாக மிக வும் வாட்டமாக இருந்தார். துன்பத்தி னாலே சோர்வடைந்து பேசக்கூட முடி யாத நிலையில் இருந்தார்.

அந்தச்செயல் பலருக்கும் வியப்பாக வும், விளங்காத புதிராகவும் இருந்தது! அதனால் அவரை அணுகி அதன் கார ணத்தைக் கேட்டறியப் பலரும் விரும்பி னார்கள். ஆனால் யாரும் சென்று கேட் கத் துணியவில்லை.

துன்பத்தில் வாடியிருக்கும் புலவ ரிடம் போய்க் கேட்டால் யாது சொல் வாரோ? என்று சிலர் கருதினார்கள். கோபமுற்று வசைபாடி விடுவாரோ என்று தயங்கினர் சிலர். எனினும் அவரின் வேதனைக்குரிய காரணத்தைக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

இத்தகைய நிலையில் சற்றும் எதிர் பாராமல் யாரோ ஒருவர் புலவரிடம் சென்று துணிந்து கேட்டார்.

'' அழுபவரையும் கூடச் சிரித்து மகிழும்படியாக நல்ல பாடல்களை நகைச்சுவையுடன் பாடி மகிழ்வூட்டும் புலவர் திலகமே! தாங்கள் ஏன் இன்று இவ்வளவு துன்பமாக இருக்கின் றீர்கள் ?'' என்று கேட்டார்.

அந்தப் புலவர் அவரை நோக்கி மெல்லச் சொல்லத் தொடங்கினார்.

'' சற்றும் எதிர்பாராத விதமாக இன்று எனது 'கதாநாயகன்' காணாமல் போய்விட்டான். அந்தத் துன்பம்தான் என்னை இன்று மிகவும்.....'' புலவர், சொல்லி முடிப்பதற்குள் அங்கிருந்தவர் களில் ஒருவர் குறுக்கிட்டுக் கேட்டார்:

''புலவர் பெருமானே! தங்கள் கதா நாயகன் காணாமல் போய்விட்டானா ? இது மிகவும் அதிசயமாக இருக்கிறதே! இது வரை யாருமே கேள்விப்படாத புதிராக இருக்கிறதே !''

''ஆமாம், இவன் வெறும் கதாநாய கன் மட்டும் அல்லன். என் கவிதையின் கதாநாயகனும் அவனே '' என்றார் புலவர்.

தாங்கள் கூறுவது புரியவில்லையே ! அதனாலே எங்களுக்கு எளிதிலே புரியும் படியாகக் கூறினால் நல்லது!'' என்ற னர் அங்கிருந்தவர்களில் சிலர்.

''அருமையும், பெருமையும் உடைய என் கவிதைக் கதாநாயகன் காணாமல் போன துயரம், என்னை விளக்கமாகப் பேச முடியாதபடி செய்து விட்டது. அதனாலே...''

'அப்படிப்பட்ட அதிசயமான உங் களின் கவிதைக் கதாநாயகனின், அருமை பெருமைகள்தாம் யாவையோ ?''

''அவ்வளவு எளிதில் சொல்லிவிட முடியுமா ?''

''அப்படி யென்றால்.... உங்கள் கதாநாயகன் கடவுளா ?''

''இல்லை !''

'' தேவரா ?''

''இல்லை !''

மக்களிலே உயர்ந்த மன்னவனா?''

''இல்லை !''

'' அப்படியென்றால் உங்கள் கதா நாயகன்தான் யார் ?''

'' என் கதாநாயகன் ஓர் அஃறிணை ! அதிலும் உயிரில்லாத ஒரு சடப் பொருள் !''

'' உயிரில்லாத — சடப் பொருளா? அப்படிப்பட்ட சடப் பொருளான உங்கள் கதாநாயகனுக்கு அப்படி என்னதான் உயர் சிறப்போ ?''

'' என் கதாநாயகனால் நான் பெற்ற உயர் சிறப்புக்கும், நான் நாள்தோறும் பெற்று வந்த உதவிகளுக்கும் ஓர் அளவே இல்லை! மேலும்...

'' என்ன! உங்கள் கதாநாயகன் ஒவ் வொரு நாளும் உங்களுக்கு உதவி செய்து வந்தானா ? என்ன விந்தை ! புலவர் பெருமானே !''

'' அதுதான் என் கவிதா நாயக னின் தனிச் சிறப்பு! அவன் செய்து வந்த உதவிகள் ஒன்றா ? இரண்டா ? எந்தப் புலவருக்கும் எந்தக் கதாநாயக னும் இம்மாதிரியான உதவிகளைச் செய் திருக்கவே முடியாது.''

''அப்படிப்பட்ட அதிசய உதவிகள் தாம் யாவை என்று சொல்லுங்க ளேன்! நாங்களும் அறிந்து கொள்ளுகி றோம் !''

புலவர் சற்றுச் சிந்தித்த பிறகு, மெல்லச் சோகத்துடன் சொல்லலானார்.

'' என் கதாநாயகன், என் வீட் டிலே உள்ள விறகுகளை வெட்டிக் கொடுப்பான். காய்கறிகளையும் நறுக் கித் தருவான். மேலும்....''

அதற்குள் ஒருவர் இடைமறித்து, ''இது ஒரு பெரிய உதவியா ?'' என்று கேட்டார்.

''அவசரப்படாமல் நான் கூறுவது முழுவதையும் கேட்ட பிறகு சொல்லுங்கள்!'' என்று மேலே தொடர்ந்தார் புலவர்.

''என் வீட்டிலே உள்ள சோற்றுக்கு உப்பு வாங்கக் காசில்லை என்றால், உடனே அவன் ஓடி வந்து தன்னை அடகு வைத்துவிட்டு உப்பு வாங்கிக் கொள்ளச் செய்வான் ! இம்மட்டோ? கடிக்க முடியாத கொட்டைப் பாக்கு கிடைத்தது என்றால், அதனை நன்கு கடித்துப் போட்டுக் கொள்வதற்கு வசதியாகப் பிளந்து தருவான். அல்லது சீவிக் கொடுப்பான் — சீவலாக ! இதற்கெல்லாம் மேலாக.... என் உடம்பிலே அரிப்பு எடுத்தது என்றால் அவன் ஓடோடி வந்து அந்த அரிப்பு நீங்குமட்டும் இதமாகச் சொறிந்து விடுவான்!.... இப்படிப்பட்ட அரிய உதவிகளையெல்லாம் நான் விரும்பிய பொழுதெல்லாம் செய்து வந்த அதிசயமான என் கதாநாயகன் இன்று எப்படியோ திடீரென்று காணமல் போய்விட்டானே!'' என்று கூறிச் சோகத்தினலே மேலே பேச முடியாமல் வாட்டமுற்ருர் அந்தப் புலவர் !

அங்கிருந்தவர்களில் சிலர் புலவரைப் பார்த்து, ''காணமல் போன உங்கள் கதாநாயகன் யார் ? அவன் பெயர் யாது ?'' என்று ஆவலாகவும் அக்கறையாகவும் மீண்டும் கேட்டார்கள்.

வாடியிருந்த புலவர் கூடியிருந்தவர்களைப் பார்த்துக் கூறினர்.

''காணமல் போன கதாநாயகனுக்கு இறக்கைகள் இல்லை. அதனால் பறந்து போயிருக்கமாட்டான்.'' மேலே கூருமல் நிறுத்தினர் புலவர்.

என் கதாநாயகனை யாரோதாம் எடுத்துப் போய் இருக்க வேண்டும். அதனால் என் கதாநாயகனை எடுத்துப் போனவர்கள் யாராவது இருந்தால், அன்பு கூர்ந்து உடனே என்னிடம் கொடுத்து விட வேண்டுகிறேன்!'' என்று குழைந்து கேட்டார் புலவர்.

அதனைக் கேட்ட பலரும், அதிர்ச்சி அடைந்தவராய், அப்புலவரையே நோக்கினர்கள்.

அப்பொழுது அந்தப் புலவர், அவர்களை நோக்கி விளக்கமாகக் கூறினர்.

'' **விறகு தறிக்க, கறி நறுக்க,**
வெண் சோற்று உப்புக்கு அடகு வைக்க,
பிறகு பிளவு கிடைத்தது என்றால்
நாலாருகப் பிளந்து கொள்ள.....
பதமாய் இருந்த 'பாக்கு வெட்டி'
இறகு முளைத்துப் போன துண்டோ?
எடுத்தீராகில், கொடுப்பீரே!''

அதைக் கேட்ட அனைவரும், ''ஆகா ! ஆகா!'' என்று அவரையும், அவரது கதாநாயகனையும் வாழ்த்திப் போற்றிப் பாராட்டினர்கள்.

இதனை பாடியப் புலவர், **இராமச்சந்திரக் கவிராயர்** என்பவர்.



தெரியுமா?



1959. ஃபாஸில்கள் என்றால் என்ன?

1960. ஐ. நா. சபையின் பொதுக் குழுத் தலைவராக (President U.N. General Assembly) விளங்கிய இரண்டாவது பெண்மணி யார்?

1961. கணவன் மனைவி இருவருமே ஒரு தடவை நோபல் பரிசு பெற்றார்கள். அவர்கள் யார்? எதற்காகப் பெற்றார்கள்?

1962. நேருஜியின் சமாதிக்கு என்ன பெயர் தெரியுமா?

1963. ரவீந்திரநாத தாகூர் நிறுவிய சர்வகலாசாலையின் பெயர் என்ன?

1964. ஒஸ்மானியா சர்வகலாசாலை எங்குள்ளது?

1965. உலகிலேயே மிக நீளமான தொங்கு பாலம் (Suspension Bridge) எங்குள்ளது?

1966. மூன்று தவணைகள் (தடவை) பிரஞ்சுப் பிரதமராக இருந்தவரின் பெயர் தெரியுமா?

1967. பஞ்சாபி மொழி எந்த எழுத்துக்களினால் எழுதப்படுகிறது?

1968. உலகிலேயே மிகப் பெரிய மசூதி இன்றும் தொழுகை நடத்தும் நிலையில் உள்ளது. அது எது?

1969. இந்தியாவில் ராக்கெட் செலுத்தும் இடத்தின் பெயர் என்ன, எங்கு உள்ளது?

1970. பாரதத்தின் தேசிய மலர் என்ன?

1971. பூமியிலிருந்து சந்திரன் உத்தேசமாக எவ்வளவு தொலைவில் உள்ளது?

1972. அப்போலோ முதன் முதலாக 1969 ஜூலை 21ல் சந்திரனில் இறங்கியதே அந்த இடத்துக்கு என்ன பெயர் இட்டிருக்கிறார்கள் தெரியுமா?

1973. உலகிலேயே மிகப் பெரிய விதானம் (Dome) எது? எங்கு உள்ளது?

1974. இந்தியாவில் உள்ள மிக நீளமான பாலம் எது?

1975. இஸ்வெஸ்தா — என்பது ஒரு செய்திப் பத்திரிகை. இது எந்த நாட்டிலிருந்து வெளி வருகிறது?

1976. சண்டிகர் என்ற புதிய நகரை நிர்மாணித்தவர் யார்?

1977. சர்வதேச நீதி மன்றம் எந்த நாட்டின் தலைநகரில் உள்ளது?

1978. தரைப்படையின் காப்டனுக்குச் சமமான பதவி கடற்படையில் எது?

1979. குடியரசு என்ற புகழ் பெற்ற நூலை எழுதியவர் யார் தெரியுமா? அவர் ஒரு தத்துவ மேதையும்கூட.

1980. இந்தியாவில் பகல் நேரம் மிக நீண்டிருக்கும் நாள் எது?


1981. அக்பரின் வரலாற்றை அக்பர் நாமா, அயினி இ அக்பரி என்ற நூல்கள் மூலம் எழுதியவர் யார்?

தெரியுமா?



1959. பூமியின் அடியில் உள்ள பாறைகளில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மிருகங்கள் தாவரங்களின் அடையாளங்கள் பதிந்திருக்கும். இதற்கே ஃபாஸில்கள் என்று பெயர். 1960. மிஸ் ஏஞ்சல் ப்ரூக்ஸ் என்பவர். 1961. போலந்து நாட்டைச் சேர்ந்த க்யூரி தம்பதியர், பௌதிகத்துக்கான பரிசைப் பெற்றார்கள். 1962. சாந்தி வனம். 1963. சாந்திநிகேதனில் உள்ளது. விஸ்வ பாரதி என்று பெயர். 1964. ஹைதராபாதில். 1965. நியூயார்க் நகரில். வெரஸானோ என்னுமிடத்தில். 4265 அடிகள் நீளம் 1966. எட்வர்ட் டலாடியர். 1967 குருமுகி எழுத்துக்களில். 1968. டெல்லியில் உள்ள ஜும்மா மசூதி 9290 சதுர மீட்டர்கள். இது பழமையானதில் பெரியது. ஜாகர்த்தாவில், மெர்டெக்கா மசூதி 1962-ல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. 50,000 பேர்களுக்கு இடமளிக்கும் இதுவே மிகப் பெரிய மசூதி. 1969. தும்பா, திருவனந்தபுரத்துக்கருகில். 1970. தாமரை (Lotus). 1971. பூமியின் மையத்திலிருந்து சந்திரனின் மையத்துக்கு 384,402 கிலோ மீட்டர்கள் அல்லது பூமியின் ஒரு விளிம்பிலிருந்து சந்திரனின் ஒரு விளிம்புக்கு 376,285 கிலோ மீட்டர்கள் தூரம். 1972. ஸீ ஆஃப் ட்ராங்க்விலிடி என்று. 1973. கர்நாடகா மாநிலத்திலுள்ள பீஜப்பூரில் இருக்கும் கோல் கும்பாஸ். 1974. ஸோனே (Sone) பாலம் 3147 மீட்டர் நீளம். 1975 ரஷ்யாவிலிருந்து. 1976. லீ கர்பூஸியர் என்ற பிரெஞ்சுக் கட்டடக் கலைஞர். 1977. ஹாலந்தின் தலைநகரான ஹேக் நகரில். 1978. லெஃப்டினண்ட் (Lieutement) 1979. பிளேட்டோ - கிரேக்க அறிஞர் 1980. ஜூன் 21ம் தேதி. 1981. அக்பரின் அவையை அலங்கரித்த கவிஞரும், மேதையுமான அபுல் ஃபாஸல் என்பவர்.

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதனால் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்



ஒரு நாளைக்கு ஒரு ரூபாயை ஒதுக்கி உங்கள் கவலைகளைப் போக்குங்கள்

வெகு சீக்கிர மென்றோ, தாமதமாகி விட்ட தென்றோ எண்ண வேண்டாம். ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் என்று சிறிய அளவில் கூட நீங்கள் சேமிக்கத் தொடங்க காலம் கடக்கவில்லை. சீக்கிரத்தில் உங்கள் சேமிப்பு உங்களுக்கு பாதுகாப்புடன், மகிழ்ச்சிகரமான நிதியையும் அளிக்கிறது.

சேமிப்பதற்கு யூகோபாங்க் உங்கள் அருகாமையில் உள்ள வசதியான பாங்க்

விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள யூகோ பாங்க் கிளையை அணுகவும்

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-52A TAM

Agfacolor®

இயற்கையான வண்ணங்கள் பொருந்திய பிலிம்.



SIMOES/AG/13C